தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

## நாமகிரிப்பேட்டையில் ரூ.25 லட்சம் மஞ்சள் ஏலம்

**ராசிபுரம்,**

ராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கம் சார்பில் நாமகிரிப்பேட்டை ஏல விற்பனை மையத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மஞ்சள் ஏலத்தில் ரூ.25 லட்சத்துக்கு மஞ்சள் ஏலம் போனது.

நாமகிரிப்பேட்டை ஏல மையத்தில் நடைபெற்ற ஏலத்தில் மொத்தம் விரலி, உருண்டை, பனங்காலி போன்ற ரகங்களை சேர்ந்த 521 மூட்டைகள் விற்பனைக்கு வந்தன.

இதில் விரலி ரகம் குறைந்தபட்சமாக குவிண்டாலுக்கு ரூ.6,702 முதல் அதிகபட்சமாக ரூ.7,579 வரை விற்பனையானது. இதேபோல, உருண்டை ரகம் ரூ.5,909 முதல் அதிகபட்சமாக ரூ.6,699 வரை விலை போனது. பனங்காலி ரூ.11,899 முதல் அதிகபட்ச விலையாக குவிண்டாலுக்கு ரூ.18,099-க்கு விலை போனது.

## உர முறைகேடு: நடவடிக்கை எடுக்க ஆட்சியர் உத்தரவு

**கோவை,**

உர முறைகேடு தொடர்பாக விவசாயிகள் கொடுக்கும் புகார் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு, அனைத்து வட்டார வேளாண் உதவி இயக்குநர்களுக்கும் மாவட்ட ஆட்சியர் அர்ச்சனா பட்நாயக் உத்தரவிட்டுள்ளார்.

கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பிப்ரவரி 28-ஆம் தேதி நடைபெற்ற விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், அதிக விலைக்கு உரங்களை விற்பதாகப் புகார்கள் தெரிவிக்கப்பட்டன. இதையடுத்து, உர விற்பனையில் முறைகேடு நடைபெற்றாலோ, யூரியா உரம் அதிக விலைக்கு விற்றாலோ அனைத்து வட்டார

வேளாண் உதவி இயக்குநர்கள் மற்றும் தரக்கட்டுப்பாடு உதவி இயக்குநர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

வட்டாரங்களில் உர முறைகேடுகள் நடைபெறுவது கண்டுபிடிக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கத் தவறும் வேளாண் உதவி இயக்குநர்கள் மற்றும் தரக்கட்டுப்பாடு உதவி இயக்குநர்கள் மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கப் பரிந்துரைக்கப்படும். இதுதொடர்பாக விவசாயிகள் கொடுக்கும் புகார் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். அதே நேரத்தில் நடவடிக்கை எடுத்த விவரம் குறித்து 24 மணி நேரத்தில் மாவட்ட ஆட்சியருக்கும், வேளாண்மை இணை இயக்குநருக்கும் தெரிவிக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது.

## கறிக்கோழி கொள்முதல் விலையில் மாற்றமில்லை

**பல்லடம்,**

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம் பல்லடத்தை தலைமையிடமாக கொண்டு செயல்படும் பி.சி.சி.(பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் பண்ணைக்கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது.

திங்கள்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 63 ஆக இருந்தது. விற்பனையில் மாற்றம் எதுவும் இல்லாததால் செவ்வாய்க்கிழமையும் அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

முட்டை விலை

நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த முட்டைப் பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ. 3.45, சென்னையில் ரூ. 3.80.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 45.65 அடி

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை 45.65 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 721 கன அடி நீர் வந்தது.

அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீர் திறந்துவிடப்பட்டது. வாய்க்காலில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. அணையில் நீர் இருப்பு 3.4 டி.எம்.சி.

## குடமிளகாய் சாகுபடிக்கு விவசாயக் குழுக்கள்

**வேலூர்,**

வேலூர் மாவட்டத்தில் முதன்முறையாக குடமிளகாய் சாகுபடி செய்வதற்காக 9 பேர் கொண்ட இரு விவசாயக் குழுக்கள் அமைக்கப்படுகிறது என்று வேலூரில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற மாவட்ட திட்டக்குழுக் கூட்டத்தில் அதிகாரிகள் தகவல் தெரிவித்தனர்.

திட்டக் குழுக் கூட்டம் ஆட்சியர் அலுவலக கருத்தரங்கு கூடத்தில் அதன் தலைவர் டாக்டர் லீலா சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ஆட்சியர் இரா.நந்தகோபால், திட்ட இயக்குநர் என்.சீனிவாசன் மற்றும் துறைவாரி உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

மாநில சமச்சீர் வளர்ச்சி திட்டத்தின் கீழ் பின்தங்கிய ஒன்றியங்களான ஆலங்காயம், கந்திலி மற்றும் திமிரியில் தோட்டக்கலைத் துறை மற்றும் வேளாண்மைத் துறை சார்பில் பல்வேறு திட்டப் பணிகள் மேற்கொள்வது குறித்து ஆலோசிக்கப்பட்டது.

அப்போது காய்கறி உற்பத்தி நாற்றுகள் தயாரிப்பதற்கு 2 விவசாயக் குழுக்கள் ஏற்படுத்தியுள்ளதாகவும், சாமை அரவை ஆலையை இரு இடங்களில் நிறுவ முடிவு செய்திருப்பதாகவும் ஆட்சியரிடம் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் பசுமைக் குடில் மூலம் குடமிளகாய் உற்பத்தி மற்றும் விற்பனை திட்டத்தை செயல்படுத்த முதன்முறையாக மாவட்டத்தில் 9 பேர் கொண்ட இரு விவசாயிகளின் குழுக்கள் ஏற்படுத்தப்படுகிறது. இதற்காக ரூ.21 லட்சம் முழு மானியம் அளிக்கப்படவுள்ளது. திமிரியில் 100 மெட்ரிக் டன் தானியங்களை

சேமிக்கும் வகையில் கிடங்கு அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என தகவல் தெரிவிக்கப்பட்டது.

திமிரி, கே.வி.குப்பம், சோளிங்கர், அணைக்கட்டு, நெமிலி ஒன்றியங்களில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க வேண்டும் என திட்டக் குழு உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்தனர்.

மாவட்டத்தில் சித்த மருத்துவக் கல்லூரி, ஆயுர்வேத மருத்துவ கல்லூரி, யுனானி மருத்துவ கல்லூரி ஆகியன அமைக்க அரசுக்கு கோரிக்கை வைக்கப்பட்டது.

## இரவு வெப்ப அளவுகள் அதிகரிக்கும்

**நாமக்கல்,**

கடந்த வாரம் நிலவிய இரவு வெப்ப அளவுகள் மேலும் அதிகரித்து காணப்படும் என்று நாமக்கல் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து அந்த மையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு:

நாமக்கல் மாவட்ட வானிலையில் அடுத்த மூன்று நாள்களுக்கு (மார்ச் 5 முதல் 7-ஆம் தேதி வரை) வானம் லேசான மேக மூட்டத்துடன் இருப்பதுடன் வியாழக்கிழமை மட்டும் சில இடங்களில் 2 மி.மீ. மழை பெய்ய வாய்ப்புள்ளது. காற்றின் திசைவேகம் மணிக்கு 8 முதல் 10 கி.மீ. வேகத்தில் தென் கிழக்கிலிருந்து வீசக்கூடும். வெப்ப நிலை குறைந்தபட்சம் 75.2 முதல் அதிகபட்சம் 93.2 டிகிரி பாரன்ஹீட் வரையும், காற்றின் ஈரப்பதம் குறைந்தபட்சம் 36 சதம் முதல் அதிகபட்சம் 82 சதம் வரையும் இருக்கும்.

**கோழிப் பண்ணையாளர்களுக்கு:** கடந்த வாரம் இரவு வெப்ப அளவுகள் 68 முதல் 69.8 டிகிரி பாரன்ஹீட் வரை நிலவியது. இது சற்று உயர்ந்து 75.2 டிகிரி பாரன்ஹீட் வரை காணப்படும். இதனால், கோடை தொடங்கும் வாய்ப்பு அதிகரிக்கும் என்பதால் பண்ணையாளர்கள் இனி வரும் காலங்களில் கோடை வெப்பத்தை எதிர்கொள்ளும் அனைத்து முறைகளையும் பின்பற்ற வேண்டும்.

**விவசாயிகளுக்கு:** கால்நடை பராமரிப்புத் துறை மூலம் கால்நடைகளுக்கு தற்போது கோமாரி நோய் தடுப்பூசி போடப்படுகிறது. சினை ஆடுகளுக்கோ, மாடுகளுக்கோ கால்நடை மருத்துவரின் ஆலோசனையைப் பெற்று தடுப்பூசியைப்

போட வேண்டும். சரியான பருவத்தில் தடுப்பூசியைப் போட்டுக் கொள்வது அவசியம்.

நான்கு முதல் ஆறுமாத வயதுடைய கரும்புப் பயிரில் வெண்கம்பளி அசுவினி தாக்குதல் பரவலாகக் காணப்படுகிறது. இந்தப் பூச்சி மாவுப்பூச்சி போன்ற தோற்றத்துடன் வெள்ளை நிறத்தில் இருக்கும். இதைக் கட்டுப்படுத்த அசிபேட் 2 கிராம் அல்லது மோனோகுரோட்டோஃபாஸ் 2 மிலியை ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து 15 நாள்கள் இடைவெளியில் இரு முறை தெளிக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கால்நடை மருந்தகக் கட்டடம் திறப்பு**

**நாமக்கல்,**

பொம்மகுட்டைமேட்டில் ரூ.15 லட்சத்தில் கட்டப்பட்ட கால்நடை மருந்தகக் கட்டடம் செவ்வாய்க்கிழமை திறக்கப்பட்டது.

நாமக்கல் ஒன்றியம், செல்லப்பம்பட்டி ஊராட்சி பொம்மகுட்டைமேட்டில் தனியார் கட்டடத்தில் கால்நடை மருந்தகம் செயல்பட்டது. இதனால், கால்நடை வளர்ப்போருக்கு ஏற்பட்ட சிரமங்களைக் கருத்தில் கொண்டு புதிதாக கால்நடை மருந்தகக் கட்டடம் கட்டத் திட்டமிடப்பட்டது. இதன்படி, கால்நடைப் பராமரிப்புத் துறை சார்பில் ரூ.15 லட்சம் மதிப்பில் புதிய ஊரகக் கால்நடை மருந்தகக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டது.

இந்தக் கட்டடம் செவ்வாய்க்கிழமை திறக்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு, மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி தலைமை வகித்தார். நாமக்கல் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் கே.பி.பி.பாஸ்கர், கால்நடை மருந்தகக் கட்டடத்தை திறந்துவைத்துப் பார்வையிட்டார். முன்னதாக, காரப்பள்ளியில் கால்நடைப் பராமரிப்புத் துறை சார்பில் கால்நடைகளுக்கான இலவசமாக கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாமை ஆட்சியர் தொடக்கிவைத்தார். கால்நடைப் பராமரிப்புத் துறை இணை இயக்குநர் சக்திவேல், பொதுப் பணித் துறை செயற் பொறியாளர் சீ.தொல்காப்பியன், நகர்மன்றத் துணைத் தலைவர் சேகர், செல்லப்பம்பட்டி ஊராட்சித் தலைவர் சுரேஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**ரசாயன உரங்கள் தேவையான அளவில் இருப்பு**

**நாமக்கல்,**

ரசாயன உரங்கள் தேவையான அளவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, தனியார் உர விற்பனை மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளதாக வேளாண் இணை இயக்குநர் கே.தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறியிருப்பது:

நிகழ் பருவப் பயிர் சாகுபடிக்கு தேவையான ரசாயன உரங்கள் தேவையான அளவில் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள், தனியார் உர விற்பனை மையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. இதன்படி, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் யூரியா 803 மெட்ரிக் டன்களும், டிஏபி 447 மெட்ரிக் டன்களும், பொட்டாஷ் 515 மெட்ரிக் டன்களும், கூட்டு உரங்கள் 1188 மெட்ரிக் டன்களும் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. சூப்பர் பாஸ்பேட் உரங்கள் தேவையான அளவு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு சங்கங்களில் இருப்பு வைத்திட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தனியார் உர விற்பனை மையங்களில் யூரியா 739 மெட்ரிக் டன்களும், டிஏபி 53 மெட்ரிக் டன்களும், பொட்டாஷ் 123 மெட்ரிக் டன்களும், கூட்டு உரங்கள் 714 மெட்ரிக் டன்களும் இருப்பு வைக்கப்பட்டுள்ளன. தவிர, டான்பெட் இணையக் கிடங்கில் யூரியா 221 மெட்ரிக் டன்களும், டிஏபி 1215 மெட்ரிக் டன்களும், பொட்டாஷ் 302 மெட்ரிக் டன்களும், கூட்டு உரங்கள் 740 மெட்ரிக் டன்களும் இருப்பிலுள்ளன.

உர விற்பனை மையங்களில் வேளாண் அலுவலர்களால் உர மாதிரிகள் எடுத்து உரங்களின் தரம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. தவிர, அதிகபட்ச சில்லறை விற்பனை விலைக்கு மேல் விற்கப்பட்டால், உரக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் உர விற்பனையாளர்களுக்கு எச்சரிக்கப்பட்டுள்ளது.

எனவே, விவசாயிகள் இந்த உரங்களை நியாயமான விலையில் பெற்றுப் பயன் பெற வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கால்நடைகளுக்கு உலர் தீவனம் விநியோகம்

**கிருஷ்ணகிரி,**

கோடை காலத்தில் கால்நடைகளுக்கு தீவனப் பற்றாக்குறை ஏற்படாமல் இருக்க, கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உலர் தீவனங்கள் வழங்கும் திட்டத்தின் கீழ் கால்நடைகளின் உரிமையாளர்களுக்கு தீவனக் கட்டுகள் வழங்கப்படுகின்றன.

கடந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சியால், கால்நடைகளைப் பராமரிக்க விவசாயிகள் பெரிதும் அவதிப்பட்டனர். தீவன விலை உயர்வால் கால்நடைகளைப் பராமரிக்க இயலாமல் பல விவசாயிகள் அவற்றை விற்கும் நிலைக்கு தள்ளப்பட்டனர்

இதையடுத்து, குறைந்த விலையில் தீவனம் வழங்க வேண்டும் என அரசை விவசாயிகள் வலியுறுத்தினர். இதையடுத்து, மானிய விலையில் உலர் தீவனம் வழங்கும் திட்டத்தை தமிழக அரசு அறிவித்தது. இதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டதில் கிருஷ்ணகிரி, ஊத்தங்கரை, சூளகிரி, தேன்கனிக்கோட்டை உள்பட 6 இடங்களில் உலர் தீவனக் கிடங்குகள் அமைக்கப்பட்டன.

இந்தக் கிடங்குகளிலிருந்து பயனாளிகளிடமிருந்து பெறப்பட்ட விண்ணப்பங்களின் முன்னுரிமையின் அடிப்படையில், ஒரு கிலோ ரூ.2 என்ற விலையில் தீவனங்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன்படி, ஒரு மாட்டுக்கு நாள் ஒன்றுக்கு 3 கிலோ வீதம் 7 நாள்களுக்கு 21 கிலோ உலர் தீவனக் கட்டுகள் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம் கிருஷ்ணகிரி மாவட்டத்தில் 4,000-க்கும் மேற்பட்ட விவசாயிகள் பயனடைவர் என கால்நடைப் பராமரிப்புத் துறையின் இணை இயக்குநர் ராஜேந்திரன் தெரிவித்தார்.

## கொல்லிமலைப் புளி வரத்து தொடக்கம்

**தம்மம்பட்டி,**

சேலம் மாவட்டம், தம்மம்பட்டி வாரச்சந்தைக்கு கொல்லிமலைப் புளி வரத்து தொடங்கியது.

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையில் சுமார் 55-க்கும் மேற்பட்ட மலைக் கிராமங்கள் உள்ளன. இங்குள்ள புளியமரங்களில் தற்போது அதிக அளவில் புளி

காய்த்துள்ளது. இந்த புளியை மரங்களில் இருந்து பறித்து கூடைகள் மூலம் சேலம் மாவட்டம், தம்மம்பட்டி வாரச் சந்தைக்கு விற்பனைக்கு கொண்டு வருகின்றனர்.

தம்மம்பட்டியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற புளிச் சந்தைக்கு சுமார் 200க்கும் மேற்பட்டக் கூடைகளில் கொல்லிமலைப் புளி விற்பனைக்கு கொண்டு வரப்பட்டது. கிலோ ரூ.30க்கு புளி விற்பனை செய்யப்பட்டது.

இதுகுறித்து கொல்லிமலையைச் சேர்ந்த பொதுமக்கள் கூறியது:

தற்போது கொல்லிமலையில் புளி சீசன் தொடங்கியுள்ளது. தொடக்கத்தில் கிலோ ரூ.30 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. புளியை வாங்க வெளியூர் வியாபாரிகள் வரத் தொடங்கினால், விலை அதிகரிக்கும். மே மாதம் கடைசி வரையில் சீசன் இருக்கும் என்றனர்.

## பச்சமலையில் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம் தொடக்கம்

**தம்மம்பட்டி,**

மரங்களை வளர்த்து மழை பெற பொதுமக்கள் உதவிட வேண்டுமென்று சேலம் மாவட்ட ஆட்சியர் க.மகரபூஷணம் கேட்டுக் கொண்டார்.

தம்மம்பட்டி அருகே உள்ள பச்சமலையில் சேலம், திருச்சி மாவட்டப் பகுதிகள் அடங்கியுள்ளன. இந்த நிலையில், பச்சமலை மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டத்திற்காக நபார்டு வங்கி ரூ.5.85 கோடியை நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த நிதியின் மூலம் மரம் வளர்ப்பு, வேளாண்மை விரிவாக்கம், மண்வளம் மேலாண்மை, கழிவுப் பொருள்களிலிருந்து பொருள்கள் தயாரித்தல், சமுதாய மேம்பாடு உள்ளிட்டப் பணிகள் செய்யப்பட உள்ள. 6 வருடத்துக்கு செயல்படுத்தப்பட உள்ள இந்தத் திட்டத்தை ஹேண்ட் இன்ட் ஹேண்ட் இந்தியா என்ற தொண்டு நிறுவனம் செயல்படுத்த உள்ளது.

இந்தத் திட்டத்தின் தொடக்கக விழா பச்சமலை டாப் செங்காட்டுப்பட்டியில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நபார்டு வங்கியின் முதன்மைப் பொதுமேலாளர் வெங்கடேஷ்வரராவ் தலைமை வகித்தார். ஹேண்ட் இன்ட் ஹேண்ட் இந்தியாவின் முதன்மைச் செயல் அலுவலர் ஜெயசீலன் வரவேற்றார்.

திட்டத்தை சேலம் மாவட்ட ஆட்சியர் க.மகரபூஷணம், திருச்சி மாவட்ட ஆட்சியர் ஜெயஸ்ரீ முரளிதரன் ஆகியோர் தொடக்கி வைத்தனர்.

இதில், சேலம் மாவட்ட ஆட்சியர் க.மகரபூஷணம் பேசியது:

மண்வளம் குன்றாமல் இருக்க மரங்களை வெட்டாமல் தவிர்க்க வேண்டும். மரங்கள் அதிகளவில் வெட்டப்பட்டதால், கடந்த இரு ஆண்டுகளாக போதுமான அளவு மழை பெய்யவில்லை. எனவே, பொதுமக்கள் மரங்களை வளர்த்து மழைப் பெற உதவிடவேண்டும் என்றார் ஆட்சியர்.

ஹேண்ட் இன் ஹேண்ட் இந்தியாவின் தலைவர் கல்பனா சங்கர், கிராமக் குழுத் தலைவர்கள் சேலம் பெருமாள், திருச்சி கணேசன் ஆகியோர் பேசினர். தொண்டு நிறுவனத்தின் முதுநிலைச் செயலாக்க அலுவலர் அமுதசேகரன் நன்றி கூறினார். நிகழ்ச்சியில், ஆத்தூர் கோட்டாட்சியர் ஜெயராம், கெங்கவல்லி வட்டாட்சியர் சக்திவேல், வருவாய் ஆய்வாளர்கள் ரவிக்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## பொன்னமராவதி அருகே பயறுவகை பெருக்கத் திட்ட பயிற்சி முகாம்

**பொன்னமராவதி,**

பொன்னமராவதி அருகேயுள்ள நகரப்பட்டியில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பயறுவகை பெருக்கத் திட்ட பயிற்சி முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது.

முகாமுக்கு புதுக்கோட்டை வேளாண்மை துணை இயக்குநர் (மத்திய திட்டம்) ரெ. சதானந்தம் தலைமை வகித்து, குறைந்த நீர் செலவு, குறைவான சாகுபடி செலவில் அதிக மகசூல் அளிக்கும் பயறுவகை பயிர்களின் சாகுபடி பரப்பை அதிகப்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்து பேசினார்.

தொடர்ந்து, பிரசார ஊர்தியை தொடக்கி வைத்த அவர், விவாயிகளுக்கு இடுபொருள்களையும் வழங்கினார். பயறுவகை பயிர்களில் டிஏபி கரைசல் தெளிக்கும் முறைகள் மற்றும் வேளாண்மை துறையின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து வேளாண் அலுவலர் ரமேஷ் பேசினார். முகாமில் கல்லம்பட்டி, நகரப்பட்டி விவசாயிகள் பங்கேற்றனர். இதற்கான ஏற்பாடுகளை உதவி

வேளாண்மை அலுவலர் அருளானந்தம், குமாரசாமி உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

முன்னதாக, வேளாண்மை உதவி இயக்குநர் சி. ஜெயபாலன் வரவேற்றார். உதவி வேளாண்மை அலுவலர் மணிமுத்து நன்றி கூறினார்.

**மேலபட்டில் பயனாளிகள்46 பேருக்கு விலையில்லா ஆடுகள்**

**அறந்தாங்கி,**

அறந்தாங்கி அருகே மேலப்பட்டு ஊராட்சியில் 46 பயனாளிகளுக்கு ரூ. 5.75 லட்சம் மதிப்புள்ள விலையில்லா வெள்ளாடுகளை அறந்தாங்கி சட்டப்பேரவை உறுப்பினர் மு. ராஜநாயகம் சனிக்கிழமை வழங்கினார்.

கால்நடை துறை உதவி இயக்குநர் ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற விழாவிற்கு அறந்தாங்கி ஒன்றியக் குழு துணைத் தலைவர் பி.எம். பெரியசாமி, மாவட்ட ஊராட்சி உறுப்பினர் த. செல்வராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கிராம நிர்வாக அலுவலர் ம. உலகநாதன், மாங்குடி கூட்டுறவு சங்கத் தலைவர் ஆர். பஞ்சநாதன், ஒன்றியக் குழு உறுப்பினர் ஆ. வெள்ளச்சாமி, பெருங்காடு ஊராட்சித் தலைவர் கே. மாயழகு உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**திருவாரூரில் இன்று கால்நடைகளுக்கு தடுப்பூசி**

**திருவாரூர்,**

திருவாரூர் மாவட்டத்தில் புதன் (மார்ச் 5), வியாழன் (மார்ச் 6) ஆகிய நாள்களில் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் பணி நடைபெறவுள்ளது.

இதுகுறித்து ஆட்சியர் சி. நடராசன் வெளியிட்ட செய்திக்குறிப்பு: திருவாரூர், கொரடாச்சேரி, நன்னிலம், குடவாசல், வலங்கைமான், மன்னார்குடி, நீடாமங்கலம், முத்துப்பேட்டை, திருத்துறைப்பூண்டி ஒன்றியங்களில் மார்ச் 5-ம் தேதியும், திருவாரூர் ஒன்றியத்தில் திருவாதிரைமங் கலம், வடகுடி உள்ளிட்டப் பகுதிகளில் மார்ச் 6-ம் தேதியும் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்படுகிறது. எனவே, கால்நடை வளர்ப்பாளர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

## தூத்துக்குடி கடற்கரைப் பகுதியில் மீன்வளத் துறை அதிகாரிகள் திடீர் சோதனை

**தூத்துக்குடி,**

தூத்துக்குடி கடற்கரைப் பகுதியில் தடைசெய்யப்பட்ட சுருக்குமடி வலைகள் பயன்படுத்தப்படுகின்றனவா என மீன்வளத் துறை அதிகாரிகள் செவ்வாய்க்கிழமை திடீர் சோதனை மேற்கொண்டனர்.

தூத்துக்குடி துறைமுக கடற்கரை பூங்கா பகுதியில் மீன்வளத் துறை உதவி இயக்குநர் (மீன்பிடி துறைமுகம்) சேகர் தலைமையில் அதிகாரிகள் சிலர் செவ்வாய்க்கிழமை காலை திடீரென சோதனை மேற்கொண்டனர். அப்போது, தடைசெய்யப்பட்ட சுருக்குமடி வலைகள் பயன்படுத்தப்படுகிறதா என சோதனை நடத்தப்பட்டது. தமிழக மீனவர்கள் சுருக்குமடி வலையை பயன்படுத்துவதால்தான் இந்தியா- இலங்கையிடயே பிரச்னை ஏற்பட்டு வருவதாகவும், இந்த வலைகளை பயன்படுத்தக் கூடாது என்றும் மீனவர்களிடம் அதிகாரிகள் கேட்டுக்கொண்டனர்.

அரசு உத்தரவையும் மீறி பயன்படுத்தினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் எச்சரித்தனர்.

இந்த தகவல் பரவியதும் அனைத்து நாட்டுப்படகு மீனவர்களும் ஊர்த் தலைவர் அண்ணாதுரை தலைமையில் கடற்கரையில் திரண்டனர். பின்னர் மீன்வளத் துறை அதிகாரிகளிடம் சுருக்குமடி வலைகளை கன்னியாகுமரியில் இருந்து பாம்பன் வரை அனைத்து மீனவர்களும் பயன்படுத்துகின்றனர் எனக் கூறி வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர்.

இருப்பினும், சுருக்குமடி வலைகளை பயன்படுத்துவதை மீனவர்கள் தவிர்க்க வேண்டும் என அதிகாரிகள் கேட்டுக் கொண்டு அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர்.

## பாபநாசம், மணிமுத்தாறு அணைகள் மூடல்

**திருநெல்வேலி,**

திருநெல்வேலி மாவட்டத்தில் பிரதான அணைகளின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து வருகிறது. பாபநாசம் அணையின் நீர்ட்டம் செவ்வாய்க்கிழமை 49.40

அடியாகக் குறைந்துவிட்டது. பிசான சாகுபடி அறுவடை நடைபெற்று வருவதால் பாபநாசம், மணிமுத்தாறு அணைகள் மூடப்பட்டன.

இதற்கிடையே, கடந்த சில தினங்களாகப் பெய்த மழையால் திருநெல்வேலி மாவட்டத்தில் நெல் அறுவடை பாதிக்கப்பட்டுள்ளது.

2013-ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவத்தில் மழை குறைவாகப் பெய்ததால், 118 அடி கொள்ளளவு கொண்ட மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் எதிர்பார்த்தவாறு உயரவில்லை. 143 அடி கொள்ளளவு கொண்ட பாபநாசம் அணை, 156 அடி கொள்ளளவு கொண்ட சேர்வலாறு அணைகளும் முழு கொள்ளளவை எட்டவில்லை.

எனினும், அணைகளில் உள்ள நீர்இருப்பை வைத்து நிகழ் பிசான பருவத்தில் திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் 11 கால்வாய்கள் மூலம் பாசனம் பெறும் 86,107 ஏக்கர் நிலங்களுக்கு பாபநாசம் அணையில் இருந்தும், பெருங்கால் மதகு பாசனத்தில் 2586 ஏக்கர் நிலங்களுக்கு மணிமுத்தாறு அணையில் இருந்தும் தண்ணீர் திறக்கப்பட்டது.

இந்நிலையில், தற்போது பிசான பருவ அறுவடை நடைபெற்றுவருவதால் தண்ணீர்த் தேவை குறைந்துள்ளது. இதையடுத்து, பாசனத்துக்கு தண்ணீர் தேவையில்லாததால் மணிமுத்தாறு, பாபநாசம் அணைகள் மூடப்பட்டுள்ளதாக அணை வட்டாரங்கள் தெரிவித்தன. திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்ட மக்களின் குடிநீர்த் தேவைக்காக மட்டும் பாபநாசம் அணையிலிருந்து செவ்வாய்க்கிழமை 92.15 கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது. மணிமுத்தாறு பெருங்கால் மதகில் 10 கனஅடி திறந்துவிடப்படுகிறது.

அணைகளின் நீர் இருப்பு: செவ்வாய்க்கிழமை (மார்ச் 4) நிலவரப்படி பாபநாசம் அணை நீர்மட்டம் 49.40 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 97.11 கனஅடி நீர்வரத்து இருந்தது. சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 62.96 அடியாக இருந்தது. மணிமுத்தாறு

அணை அணையின் நீர்மட்டம் 72.00 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 124 கனஅடி நீர்வரத்து இருந்தது.

ராமநதி அணை மூடல்: 84 அடி கொள்ளளவு கொண்ட ராமநதி அணையின் நீர்மட்டம் 25 அடியாகக் குறைந்தது. அணைக்கு வந்து கொண்டிருந்த 10 கனஅடி மட்டும் குடிநீர்த் தேவைக்காகத் திறக்கப்பட்டுள்ளது. அதிகளவில் அணையில் சகதி இருப்பதால் தொடர்ந்து தண்ணீர் திறக்க வாய்ப்பில்லாத நிலையில் அணை மூடப்பட்டது.

அறுவடை பாதிப்பு: திருநெல்வேலி மாவட்டத்தில் கடந்த 2 தினங்களாக மழை பெய்து வருகிறது. செவ்வாய்க்கிழமை காலை நிலவரப்படி, பாபநாசம் அணையில் 12 மி.மீ., சேர்வலாறு அணையில் 2 மி.மீ., மணிமுத்தாறு அணையில் 42 மி.மீ., கடனாநதி அணையில் 2 மி.மீ., அம்பாசமுத்திரத்தில் 35 மி.மீ., சேரன்மகாதேவியில் 22 மி.மீ., களக்காட்டில் 30 மி.மீ.,, கன்னடியன் அணைக்கட்டில் 44 மி.மீ. மழை பெய்துள்ளது. திடீர் மழையால் சேரன்மகாதேவி, அம்பாசமுத்திரம், கடையம், ஆழ்வார்குறிச்சி பகுதியில் நெற்பயிர்கள் சாய்ந்து அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

**விதைச்சான்று இயக்குநரக அதிகாரி ஆய்வு**

**சிதம்பரம்,**

கடலூர் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் அரசு மற்றும் தனியார் விதை விற்பனை நிலையங்கள், விதை சுத்திகரிப்பு நிலையங்கள், விதை பரிசோதனை மையங்கள் மற்றும் விதைச்சான்று துறைகளில் பதிவு செய்யப்பட்ட விதைப்பண்ணைகளை கோவை விதைச் சான்று இயக்குநரக விதை ஆய்வு இணை இயக்குநர் கோ.சௌந்திரம் திங்கள்கிழமை ஆய்வு மேற்கொண்டார்.

கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம் பகுதியில் உள்ள விதை விற்பனை நிலையங்கள் மற்றும் விதைப் பண்ணைகளில் அவர் ஆய்வு செய்தார். அப்போது, விற்பனை நிலையங்களில் உரிமங்களை விவசாயிகள் பார்வையில் படும்படியாக அமைக்க வேண்டும், விவசாயிகளுக்கு தேவையான நேரத்தில் தரமான விதைகள் கிடைப்பதை அலுவலர்களும், விதை விற்பனையாளர்களும் உறுதி செய்ய வேண்டும் என்றார்.

விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த காய்கறி பாக்கெட்டுகளில் விதைச் சட்டம் 1996-ல் குறிப்பிடப்பட்ட அனைத்து விதிமுறைகளும் பின்பற்றப்பட்டிருக்க வேண்டும்,

விவசாயிகளுக்கு வழங்கப்படும் விற்பனைப் பட்டியலில் விவசாயிகளின் கையொப்பம் கண்டிப்பாக பெறப்பட வேண்டும், விலைப்பட்டியலில் குவியல் எண், காலாவதி நாள் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

விற்பனையாளர்கள் விதைகள் கொள்முதல் செய்யும்போது மூட்டைகளில் ஈயவில்லை பொருத்தப்பட்டுள்ளதா என்று கண்காணிக்க வேண்டும், காலாவதி தேதி முடிவுற்ற விதைகளை கண்டிப்பாக விற்பனை செய்யக்கூடாது என்றும் அவர் தெரிவித்தார். ஆய்வின்போது விதை ஆய்வு துணை இயக்குநர் ஞானஒளி, விதை ஆய்வாளர்கள் அமிர்தராஜ், பார்த்தசாரதி ஆகியோர் உடனிருந்தனர்.

## ரூ.14.30 கோடியில் தொடங்கியது நந்தன் கால்வாய் சீரமைப்புப் பணி

**செஞ்சி,**

விழுப்புரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் ரூ.14.30 கோடி மதிப்பீட்டில், நந்தன் சீரமைக்கும் பணி பூமி பூஜையுடன் திங்கள்கிழமை தொடங்கியது. திருவண்ணாமலை மாவட்டம், கொளத்தி மலையில் உற்பத்தியாகிறது துறிஞ்சலாறு. இந்த ஆற்றில் மழைக் காலங்களில் பெருக்கெடுக்கும் நீர் பள்ளிகொண்டாப்பட்டு அணையை அடைந்து, அங்கிருந்து நந்தன் கால்வாயில் திறந்து விடப்பட்டு 37 கி.மீ. பயணித்து செஞ்சி அருகே பனமலை ஏரியை வந்தடைகிறது.

ஆனால் 200 ஆண்டுகளுக்கு முன் பள்ளிகொண்டாப்பட்டு அணை பெருமழையில் சேதமடைந்தது. அப்போது முதல் தண்ணீர் தடைபட்டு நந்தன் கால்வாய் தூர்ந்து போனது. நந்தன் கால்வாய் மூலம் விழுப்புரம் மாவட்டம், செஞ்சி தாலுக்காவில் மாதப்பூண்டி, நல்லாண்பிள்ளைபெற்றாள், பாக்கம், சோ.குப்பம், தேவதானம்பேட்டை,தாண்டவசமுத்திரம் கடப்பேரி, தாண்டவசமுத்திரம் கொம்பேட் ஏரி, துத்திப்பட்டு பெரிய ஏரி, துத்திப்பட்டு மண்தாங்கல், சித்தரசூர், விழுப்புரம் தாலுக்காவில் சித்தரசூர், பனமலை, நங்காத்தூர், முட்டத்தூர், நகர், பிரம்மதேசம், எசாலம், பெருங்கலப்பூண்டி, அன்னியூர், வெள்ளேரிப்பட்டு, வீரமூர், வெங்கந்தூர், ஆரியூர், திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள பல ஏரிகள் உள்ளிட்ட 36 ஏரிகள் பயனடையும் வகையில் நந்தன் கால்வாய்த் திட்டம் 1970-ல் மீண்டும் செயல்படுத்தப்பட்டது. இந்த திட்டத்தை முழுமையாக

செயல்படுத்தாததால், பணி கிடப்பில் போடப்பட்டது. பாதியில் நிறுத்தப்பட்டுள்ள நந்தன் கால்வாய் திட்டத்தை மீண்டும் தொடங்கி, முழுமையாகச் செய்து முடிக்க வேண்டும் என பல தரப்பினரும் வலியுறுத்தி வந்தனர். இந்நிலையில் நீர்வள, நிலவள திட்டத்தின் கீழ் நந்தன் கால்வாயை சீரமைக்க உலக வங்கி நிதியிலிருந்து ரூ.14.30 கோடியை முதல்வர் ஜெயலலிதா ஒதுக்கியுள்ளார்.

இதில் ரூ.9 கோடியே 88 லட்சம் மதிப்பீட்டில் விழுப்புரம் மாவட்டத்திற்குள்பட்ட நந்தன் கால்வாயைச் சீரமைக்கும் பணி பூமி பூஜையுடன் திங்கள்கிழமை தொடங்கியது. செஞ்சி தாலுக்கா மாதப்பூண்டி ஏரியில் பொதுப்பணித்துறை நீர்வள ஆதாரப் பிரிவு உதவி பொறியாளர்கள் முன்னிலையில் பணி தொடங்கியது. 37 கிலோ மீட்டர் தூரம் நந்தன் கால்வாய் சீரமைக்கப்பட உள்ளது. இடையில் 7 பாலங்கள், 4 தண்ணீர் வரத்து குறுக்குக் வாய்க்கால் அமைக்கப்பட உள்ளன.

இதேபோல் திருவண்ணாமலை மாவட்டத்திற்குள்ப ட்ட நந்தன் கால்வாய் ரூ.4 கோடியே 42 லட்சம் மதிப்பீட்டில் சீரமைக்கப்பட உள்ளது. இப்பணி வருகிற செப்டம்பர் 30-ம் தேதிக்குள் முடிக்கப்பட உள்ளதாக விழுப்புரம் மாவட்ட கீழ்பண்ணையாறு வடிநில உப கோட்ட செயற் பொறியாளர்கள் தெரிவித்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**நெல் தரிசில் உளுந்து, பயறு தெளிப்பு**



மதுரை, திண்டுக்கல், தேனி, சிவகங்கை, விருதுநகர் மற்றும் ராமநாதபுரம் மாவட்டங்களில் விவசாயிகள் கிணற்றுப் பாசனத்தில் நெல் அறுவடை முடிந்த உடன் உளுந்து, பயறை விதை நேர்த்தி செய்து தெளிக்க தொடங்கி விட்டார்கள். விவசாயிகள் குறுகிய கால ரகங்களை தேர்ந்தெடுத்து சாகுபடியை தொடங்கி உள்ளார்கள். இனி உளுந்து, பயறு தெளிக்க உள்ள விவசாயிகள் பூமியை மெழுகு பதத்திற்கு கொண்டு வந்து விதையை விதைப்பது மிகவும் அவசியமாகும்.

**உளுந்து, பயறு சாகுபடிக்கு ஏற்ற ரகங்கள்:** உளுந்து ரகங்களான எடீடி, 2, எடீடி 3 மற்றும் எடீடி 5 போன்றவைகளை சாகுபடிக்கு தேர்ந்தெடுக்கலாம். டி9 உளுந்தினை மணற்பாங்கான மற்றும் வடிகால் வசதியுள்ள இடங்களில் சாகுபடி செய்யலாம். பயறு ரகங்களில் எடீடி 2, எடீடி 3 மற்றும் கே.எம். 2 ரகங்கள் சிறந்தவை. உளுந்து, பயறு இவைகளில் ஒரு ஏக்கரில் தெளிக்க விதை அளவு 20 கிலோ தேவைப்படும். உளுந்து, பயறு இவைகளின் வயது 90 நாட்களுக்குள் இருக்கும்.

**விதை நேர்த்தி:** விதையை விதைக்கும் முன் திரம் அல்லது பவிஸ்டின் மருந்தினை ஒரு கிலோ விதைக்கு இரண்டு கிராம் வீதம் கலந்து தெளிக்க வேண்டும். மருந்தை கலந்த பிறகு அப்படியே 24 மணி நேரம் வைத்திருந்து அடுத்த வேலையை செய்ய வேண்டும். அடுத்த வேலை யாதெனில் ஒவ்வொரு பத்து கிலோ விதைக்கும் போதும் ஒரு நுண்ணுயிர் பொட்டலம் உபயோகிக்க வேண்டும். பொட்டலத்தில் உள்ள ரைசோபியம் நுண்ணுயிரியை 250 மிலி வடித்த அரிசி கஞ்சியில் நன்றாக கலக்க வேண்டும். நுண்ணுயிர் கலந்த விதைகளை நிழலில் 15 நிமிடங்கள் உலர்த்த வேண்டும். கஞ்சி கையில் ஒட்டிக் கொள்ளாத அளவிற்கு உலர்த்த வேண்டும். பிறகு இந்த விதையை விதைக்கலாம். விதை விதைத்த 10-15 நாட்களில் பயிர் பாதுகாப்பு செய்து இலைகளை பாதிக்கும் பூச்சிகளை அழிக்க வேண்டும். இதற்கு செவின் தூள் அல்லது எண்டோசல்பான் மருந்தை தெளிக்கலாம். காய்களைப் பாதுகாக்க காய்த்துளைப்பான் புழு, பூச்சிகளை அழிக்க வேண்டும். பூஞ்சாள நோயினைக் கட்டுப்படுத்த 500 கிராம் நனையும் கந்தகத்தை 500 லிட்டர் நீரில் கரைத்து தெளிக்க வேண்டும். உளுந்து செடிகளை எலிகள் பாதிப்பிலிருந்து காப்பாற்ற வேண்டும். அடுத்து செடிகளுக்கு இடையே தோன்றும் களைச்செடிகளை கவனமாக கையால் பிடுங்க வேண்டும். களைக்கொத்தியால் கொத்தி களைகளை எடுத்தால் பூமியிலிக்கும் ஈரம் காய்ந்து செடிகளை வறட்சியால் பாதிக்கப்பட்டு விடும். பிடுங்கிய நெல் தாள் கட்டை இவைகளை பூமியை மூடிக்

கொள்ளும்படி போட வேண்டும். இது பூமியிலுள்ள ஈரத்தை ஆவியாகாமல் தடுக்கும்.

**சங்கு பருவத்தில் முக்கிய பணி:** செடிகளில் பூக்கள் தோன்றும்போது (சங்கு பருவம்) இலைவழி உரத்தைக் கொடுக்க வேண்டும். நான்கு கிலோ டிஏபி உரத்தை எடுத்துக் கொண்டு 20 லிட்டர் நீரில் கரைத்து 12 மணி நேரம் அப்படியே வைத்திருந்து, பிறகு தெளித்த கரைசலை மட்டும் கவனமாக வடிகட்டி அதை 180 லிட்டர் நீரில் கலந்து செடிகளின் மேல் கைத்தெளிப்பான் கொண்டு தெளிக்க வேண்டும். இத்தெளிப்பினை 10-15 நாட்கள் இடைவெளியில் இருமுறை செய்யலாம். உளுந்து பயிரின் கடைசி கட்டத்தில் டிஏபி உரமிட்டு ஒரு பாசனம் தர வேண்டும். சாகுபடி செலவு ரூ.4,000 ஆகின்றது. கிடைக்கும் மகசூல் 500 கிலோ ஒரு ஏக்கரில் செலவு போக நிகர லாபமாக ரூ.10,000 எடுக்கலாம்.

**கே.எம்.2 பாசிப்பயறு சாகுபடி:** தற்போதுள்ள பயறு வகைகள் சாகுபடியை தமிழக அரசு தொடர்ந்து ஊக்குவித்து வருகின்றது. தற்போது பாசன வசதி உள்ள நஞ்சை நிலங்களில் 80 முதல் 85 நாட்கள் வயதுடைய கே.எம்.2 பாசிப்பயறினை சாகுபடி செய்ய சிபாரிசு செய்யப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு சாகுபடி செலவு ரூ.10,000 ஆகின்றது. மகசூல் 500 கிலோ கிடைக்கும். இதன் மதிப்பு ரூ.30,000. சாகுபடி செலவு ரூ.10,000 போக நிகர லாபம் ரூ.20,000 எடுக்கலாம். விவசாயிகள் உளுந்து, பயறு சாகுபடியை தொடர்ந்து செய்து உற்பத்தியை அதிகரிக்க வேண்டும் என்று இக்கட்டுரையின் மூலம் ஆசிரியர் விவசாயிகளுக்கு அறிவுரை சொல்லுகிறார். விவசாயிகள் உளுந்து, பயறினை சாகுபடியினை செய்து பயன் அடையுங்கள்.

**- எஸ்.எஸ்.நாகராஜன்**

## நவீன தொழில்நுட்பம்



வனமர இலைக்கழிவுகளை உரமாக்கும் நுட்பம்: மரப்பயிர் வளர்ச்சிக்குத் தேவையான வளர்ச்சி ஊக்கிகளான சைட்டோகைனின், ஆக்ஸின் பலவகை என்சைம்கள், கிரியா ஊக்கிகள், ஹார்மோன்கள், வைட்டமின் சத்துக்கள் ஆகியவை மண்புழு உரங்களில் உள்ளன. மண்புழு கழிவுகளுக்கு நூற்புழுக்களைக் கட்டுப்படுத்தும் தன்மை உள்ளது. சில தேர்ந்தெடுக்கப்பட்ட கழிவுகளான காப்பி செடிகளின் பழத்தோல், தேக்கு, வாகை இலைகள், சொர்க்கமர விதையுரைகள், புங்கன் விதையுரைகள் ஆகியவற்றை மண்புழுவின் மூலம் மக்கும் செல்லாக மண்புழுக் கழிவுகளில் அதிக ஊட்டச்சத்துகள் உள்ளன. இக்கழிவுகளில் மக்கும் தொழில்நுட்பத்தைக் கண்டறியவும், காட்டாமணக்கு, சவுக்கு நாற்றுகளில் மக்கிய உரத்தின் தாக்கத்தை கண்டறியவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதில் "யூட்ரிலஸ் யூஜெனியே' என்ற மண்புழு ரகம் பயன்படுத்தப்பட்டது. பாரம்பரிய முறையில் மக்குதல் உரத்தயாரிப்பு முறைகளை விட மண்புழுக்களை பயன்படுத்தி குறுகிய காலத்தில் கழிவுகளை சத்துக்கள் மிகுந்த உரமாக மாற்றலாம் என்பது மக்கும் உர தொழில்நுட்ப ஆய்வு மூலம் கண்டறியப்பட்டுள்ளது. மக்கிய உரங்களில் சத்துக்கள் வேறுபட்டாலும் பொதுவாக மண்புழு உரத்தில் சத்துக்கள் அதிகமாக இருப்பதும் பல ஆய்வுகளின் முடிவாகும். தழைச்சத்து மண்புழுக்களால் தயாரிக்கப்பட்ட தேக்கு இலைகளில் அதிகமாகவும், மணிச்சத்தும், சாம்பல் சத்தும், புங்கம் விதையுரைகளில் அதிகமாகவும் உள்ளன.

காப்பி பழத்தோலைக் கொண்டு தயாரிக்கப்பட்ட மண்புழு உரத்தில் பாக்டீரியா, பூஞ்சாணம், "ஆக்டினோமைசீட்ஸ்' அசிட்டோபாக்டர், அசோஸ்பைரில்லம், பேரிங்கியா மணிச்சத்தைக் கரைக்கும் நுண்ணுயிர்கள் அதிகமாக இருப்பதும் ஆய்வின் மூலம் தெரிய வருகிறது. இத்தகைய மண்புழு உரத்தில் ஆக்ஸிஜனேற்ற இறக்க வினைகளில் ஈடுபடும் மண் நுண்ணுயிரின் வினையூக்கி அதிக அளவில் கண்டறியப்பட்டுள்ளது.

வாகை இலைகளின் மூலம் உருவாக்கப்பட்ட மக்கிய உரத்தில் அமிலபாஸ்பேட்ஸ் நொதிப்பொருள் உருவாக்கம் அதிகமாக உள்ளது. காபி பழத்தோல், சொர்க்க மரங்களில் காரபாஸ்பேட்ஸ் நொதிப்பொருள் அதிகளவில் உள்ளது என்று கண்டறியப்பட்டுள்ளது. மேலும் தாவர வளர்ச்சி ஊக்கியான இண்டோல் அசிடிக் அமிலத்தில் அளவு வாகையிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட மண்புழு உரத்தில் அதிகமாகஉள்ளது.

மக்கும் தொழில்நுட்பம் ஆய்வுகளின் மூலம் மண்புழு உரத்தின் மக்கும் தன்மை

அதிக அளவில் இருப்பது அறியப்பட்டுள்ளது. மக்கும் விகிதம் தேக்கு இலைகளில் மிகுந்து காணப்படுகிறது. சொர்க்க மரம் காபி பழத்தோலில் மக்கும் நிலை அதிகமாக இருப்பது தெரிய வந்துள்ளது.

காட்டாமணக்கு, சவுக்கு, நாற்றுகளில் மண்புழு உரம், வேர் உட்பூசண நுண்ணுயிரிகளின் கலவைகளின் தாக்கம் பதிவு செய்யப்பட்டது. பல்வேறு ஆய்வுகளின் மூலம் தரமான காட்டாமணக்கு நாற்றுகளை காபி பழத்தோல் மண்புழு உரம் மூலம் உருவாக்கலாம் என்பது தெளிவாகி உள்ளது. சவுக்கைப் பொறுத்தவரையில் தேக்கு இலைகளிலிருந்து பெறப்பட்ட மண்புழு உரமும், வேர் உட்பூசண நுண்ணுயிர்களின் கலவையும் நாற்றுக்களின் வளர்ச்சியை அபரிமிதமாக ஊக்குவித்துள்ளன.

இந்தியாவில் 384 வகையான மண்புழுக்கள் உள்ளன. இவற்றில் 6 வகையான மண்புழுக்கள் மட்டுமே வணிக ரீதியான மண்புழு உரம் தயாரிக்க உகந்தவை. இவை வனங்களில் மண்ணில் இயற்பியல், வேதியியல் தன்மை, ஊட்டச்சத்து சுழற்சி ஆகியவற்றை சீர்செய்து பாதுகாக்கின்றன. (தகவல்: முனைவர் மா.கிருபா, முனைவர் த.கலைச்செல்வி, முனைவர் மீ.திலக், வனக்கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மேட்டுப்பாளையம்-641 301. போன்: 04254 222 010).

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

### மண்புழு உரத்தின் சிறப்பியல்புகள்

நீர்சேகரிப்புத் தன்மை அதிகம். மண்ணில் ஈரப்பதத்தை பாதுகாத்து பயிர்களுக்கு அதிக நாட்களுக்கு தண்ணீர் கிடைக்கச் செய்கிறது.

நிலத்தில் மண்புழு உரம் தொடர்ந்து பயன்படுத்தும் போது நிலத்தின் அங்ககச் சத்துக்கள் அதிகரிக்கிறது. நன்மை செய்யும் நுண்ணுயிர்கள், உயிரினங்கள், மண்புழுவின் வளர்ச்சி ஆகியவைகளால் மண் இளக்கம் அடைந்து காற்றோட்ட வசதி மற்றும் மண்களின் கெட்டித் தன்மை மாற்றம் ஏற்பட்டு வடிகால் வசதி ஊக்குகிறது.

பயிர்களுக்குத் தேவையான சமச்சீரான பேரூட்டச்சத்துக்கள் நுண்ணூட்டச் சத்துக்களை பயிர்களுக்கு எடுத்துச் செல்கிறது.

ரசாயன உரங்களைப் போல் எந்த பின் விளைவுகளையும் உண்டாக்குவதில்லை. நோய் எதிர்ப்பு சக்தியையும், பயிர் வளர்ச்சி ஊக்கிகளையும் மண்புழு உரம்

அளிப்பதால் நோய் இயற்கையிலேயே கட்டுப்படுத்தப்படுவதால், ருசியான சத்துள்ள உணவுப் பொருட்கள் நமக்குக் கிடைக்கிறது. தொழுஉரம் இடுவதால் களைகள் முளைக்கும். ஆனால், மண்புழு உரம் மக்கிய நிலையில் இருப்பதால் களைகள் முளைக்காது.

காய்கறிகளின் நிறம், மணம், சுவை அதிகரிக்கிறது. காய்கள், கனிகள், தானியங்கள் இயற்கையாக வளர்வதால் அவற்றில் இருப்புத்தன்மை (Storage Capacity) கூடுகிறது. உதாரணமாக 5 நாட்கள் தற்போது வைத்திருக்கும் பொருட்கள் 10 நாட்கள் வரை வைத்திருக்க முடியும்.

வெளிநாடுகளுக்கு விவசாய விளை பொருட்கள் ஏற்றுமதி வாய்ப்பை அதிகரிக்கிறது. தாவரங்களின் இயற்கை பசுமை மாறாமல் அழகு கூட்டுகிறது. நாட்டின் பொருளாதாரம் வளம் பெறுகிறது. அன்னிய செலாவணி பாதுகாக்கப்படுகிறது. விவசாயிகள் தங்களுக்குத் தேவையான உரத்தை தாங்களே தயாரிப்பதால் விவசாய இடுபொருள் செலவு குறைந்து பொருளாதார தன்னிறைவு பெறுகின்றனர்.

ஏற்கனவே உள்ள எண்ணற்ற நோய்கள் மேலும் புதுப்புது நோய்கள் பரவுவதை கட்டுப்படுத்துகிறது. உணவே மருந்தாகும். சத்துள்ள உணவு, தூய்மையான காற்று, குடிநீர் இவைகள் அனைத்தையும் நமக்கு வழங்கியது மண்புழு உரமே ஆகும்.

பசுமை புரட்சிக்குப்பின் தற்போது ""மண்புழு" நாட்டை நோய் நொடிகளிலிருந்து காக்கும்.

உற்பத்தி மற்றும் விற்பனை: மண்புழு, மண்புழு உரம், பஞ்சகாவ்யம், மூலிகை பூச்சி விரட்டி, மண்புழு உரப்பண்ணை அமைத்தல், இயற்கை வேளாண்மை பயிற்சி அளிக்கப்படும். **தொடர்புக்கு:** 9842688456,9842524480

**என்.பழனிச்சாமி,**

**கு.கு.மண்புழு உரத்தொழிற்சாலை, பாண்டியராஜபுரம், மதுரை மாவட்டம்.**

## பெரியாறு அணை நீர்மட்டம் –உயர்கிறது

**கூடலூர்**: பெரியாறு அணை நீர்பிடிப்பு பகுதியில், இரண்டாவது நாளாக பெய்த மழையால், அணையின் நீர்மட்டம் உயர்ந்துள்ளது. மழையின்றி, பெரியாறு அணை நீர்மட்டம் வெகுவாகக் குறைந்தது. இரண்டு தினங்களுக்கு முன், 110. 50

அடியாக இருந்தது. நேற்று முன்தினம் அணையின் நீர்பிடிப்பு பகுதியில், திடீரென பெய்த மழையால், அணைக்கு நீர்வரத்து அதிகரித்து நீர்மட்டமும் உயர்ந்தது. இந்நிலையில், நேற்று முன்தினம் இரவு, மீண்டும் மழை பெய்தது.இதனால், அணைக்கு நீர்வரத்து அதிகரித்து. நேற்று காலை, நிலவரப்படி 285 கன அடியாக இருந்தது. நீர்மட்டம் அதிகரித்து 110.70 அடியாக இருந்தது. தமிழகப்பகுதிக்கு, 100 கன அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது. தொடர்ந்து அணை நீர்பிடிப்பில் சாரல் மழை பெய்து வருவதால், நீர்மட்டம் உயரும் வாய்ப்பு உள்ளது.

### பெங்களூரு ரோஸ் செடிகள் விருத்தாசலத்தில் விற்பனை

**விருத்தாசலம்** : பெங்களூரு ரோஸ் செடிகள் விருத்தாசலத்தில் விற்பனை செய்யப்படுகின்றன.

விருத்தாசலம் உளுந்தூர்பேட்டை சாலையில் சிவப்பு, மஞ்சள், வெள்ளை உள்ளிட்ட வண்ணங்களில் பூக்கும் ஐநூற்றுக்கும் மேற்பட்ட ரோஸ் செடிகள் விற்பனை செய்யப்படுகின்றன. செடி 30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. ரோஸ் பூக்களின் விலை உயர்வதால், நகரில் வசிப்பவர்கள் தங்கள் வீட்டுத் தோட்டங்கள், மாடிகளில் வளர்ப்பதற்கு ஆர்வமுடன் வாங்கிச் சென்றனர். ரோஸ் செடிகளை விற்பனை செய்யும் ராஜசேகர் கூறுகையில், பெங்களூரிலிருந்து கொண்டுவரப்படும் ரோஸ் செடிகளை சென்னை போன்ற மாநகரங்கள் மற்றும் நகரங்களில் விற்று வருகிறோம். நகரிலுள்ளவர்கள் மாடிகளில் வைத்து பராமரிக்க ரோஸ் செடிகளை ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர்' என்றார்.

### உழவர் மன்ற துவக்க விழா

**குளித்தலை**: நபார்டு வங்கி மற்றும் சிநேகிதி ட்ரஸ்ட் சார்பில், கரூர் மாவட்டம் தோகைமலை அருகே பாதிரிப்பட்டியில் உழவர்மன்ற துவக்க விழா நடந்தது. இதில், பஞ்., தலைவர் ரெங்கர் தலை மை வகித்தார். பாதிரிப்பட்டி கூட்டுறவு சங்க செயலாளர் கந்தர், சிநேகிதி பயிற்றுனர்கள் சத்யா, கோமலா முன்னிலை வகித்தனர். பின் நபார்டு உதவிப் பொது மேலாளர் பார்த்திபன் பேசியதாவது: புதிய விவசாய தொழில் நுட்பங்கள் பற்றி பயிற்சிகளை பெற்று விவசாய நிலங்களில் வளம்பெறச் செய்ய வேண்டும். கரூர் மாவட்டத்தில் மழையின் அளவு

குறைவாக காணப்படுவதற்கு போதிய மரங்கள் இல்லாதது முக்கிய காரணமாகும். எனவே உழவர்மன்றத்தினர் தங்களது பகுதிகளில் தங்களது பிள்ளைகளை போல கருதி மரக்கன்றுகளை நட்டு பாதுகாப்புடன் மரமாக வளர்க்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

இதைத்தொடர்ந்து தோகைமலை ஒன்றியத்தில் நபார்டு வங்கி மூலம், 5 உழவர்மன்றங்கள் துவக்கவிழா மற்றும் பயிற்சி முகாம்கள் நடத்தப்பட்டது.

## வாழைத்தார் விலை கிடு கிடு உயர்வு

**வேலாயுதம்பாளையம்**: திருமணம் உள்ளிட்ட சுப விஷேச தினங்களையொட்டி, வாழைத்தார்களின் விலை உயர்ந்துள்ளது.

கரூர் மாவட்டம் நொய்யல், மரவாபாளையம், புங்கோடை, சேமங்கி, கோம்பு பாளையம், தவுட்டுப்பாளையம், திடுக்காடுதுறை, புகளூர் உள்ளிட்ட பல்வேறு பகுதி களில், ஆயிரக்கணக்கான ஏக்கரில் பூவன், கற்பூரவள்ளி, ரஸ்தாளி, பச்சைநாடன், மொந்தன் உள்ளிட்ட பல்வேறு வகையான வாழை ரகங்கள் பயிரிடப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் விளையும் வாழைத்தார்கள் உள்ளூர் தேவைக்கு போக மீதி யுள்ள வாழைத்தார்கள் ஆந்திரா, கர்நாடகா, கேரளா உள்ளிட்ட மாநிலங்களுக்கு விற்பனைக்காக அனுப்பபடுகிறது.

கடந்த வாரத்தில், 250 ரூபாய்க்கு விற்ற பூவன் வாழைத்தார்,650 வரையிலும், ரஸ்தாளி வாழைத்தார் 200 ரூபாயில் இருந்து 450 ரூபாய்க்கும், பச்சை நாடன் 150 ரூபாயில் இருந்து 350 ரூபாய்க்கும், கற்பூரவள்ளி 200 ரூபாயில் இருந்து 350 ரூபாய்க் கும், மொந்தன் 500 ரூபாயில் 850 ரூபாய்க்கும் விற்பனை ஆனது. கோவில் விஷேசங்கள் மற்றும் திருமணம் உள்ளிட்ட சுப விஷேசங்கள் காரண மாக வாழைத்தார் விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

## உழவர் தின விழா

பரமக்குடி : பரமக்குடி உழவர் பயிற்சி நிலையத்தில், வேளாண் துறை சார்பில் உழவர் தினவிழா நடந்தது.வேளாண் இணை இயக்குநர் கிருஷ்ணமூர்த்தி தலைமை வகித்தார்.

உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குநர் உதுமான்முகைதீன் வரவேற்றார். மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் சுப்பிரமணியன் முன்னிலை வகித்தார். மாவட்ட வேளாண் அறிவியல் நிலைய உதவி பேராசிரியர் துக்கையண்ணன், அறிவுடைநம்பி, ஆனந்த் ஆகியோர் பேசினர்.

சிறந்த விவசாய விளை பொருட்களுக்கான போட்டியில், துவரையை நடவு முறையில் அதிக மகசூல் பெற்ற கமுதக்குடி போதுமணி முதல் பரிசு, மிளகாய் விளைவித்த வெங்காளூர் முத்து இரண்டாம் பரிசு, உளுந்து பயிரிட்ட சுந்தனேந்தல் சுசிலா மூன்றாம் பரிசு பெற்றனர்.

பரமக்குடி வேளாண்மை இணை இயக்குநர் கண்ணையா, உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் பொன்னுச்சாமி உட்பட விவசாயிகள் பலர் பங்கேற்றனர்.

## மரவள்ளி பயிரில் சொட்டுநீர் பாசனம் தியாகதுருகம் விவசாயிகள் ஆர்வம்

**தியாகதுருகம்** : தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்க மரவள்ளி பயிரில் சொட்டுநீர் பாசனம் அமைப்பதில் தியாக துருகம் பகுதி விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

தியாகதுருகம் பகுதியில் நெல், கரும்பு, பருத்திக்கு அடுத்தப்படியாக அதிக பரப்பில் மரவள்ளி பயிர் சாகுபடி செய்யப்படுகிறது. ஆத்தூர் பகுதியில் உள்ள "சேக்கோ பாக்டரி' நிறுவனத்தை சேர்ந்தவர்கள் நேரடியாக ஆட்களை வைத்து அறுவடை செய்து எடுத்துச் செல்கின்றனர். உடனுக்குடன் பணத்தை வழங்குவதால் பிரச்னையின்றி விவசாயிகள் நிகர லாபம் பெற்று பலனடைந்து வருகின்றனர். இதனால் 2 ஆண்டுக்கு முன்பு மரவள்ளி பயிரிடுவது இப்பகுதியில் அதிகரித்தது. பருவ மழை பெய்யாமல் ஏமாற்றியதால் சாகுபடி பரப்பு வேகமாக குறைந்து வருகிறது.

மழை காலங்களில் தண்ணீர் தேங்காமல் முறையான வடிகால் அமைத்து கிழங்கு அழுகாமல் பாதுகாப்பது அவசிமாகும். கோடைக் காலத்தில் வறட்சி காரணமாக செடிகள் காய்ந்து விடாமல் தண்ணீர் பாய்ச்ச வேண்டும்.

சொட்டு நீர்பாசனம் இதற்காக மரவள்ளி பயிரில் சொட்டு நீர்பாசன முறையை விவசாயிகள் அமைத்து வருகின்றனர்.கோடைக் காலத்தில் கிடைக்கும் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி பயிர் மகசூலை பெருக்குவதில் கவனமுடன் ஈடுபட்டுள்ளனர்.

சொட்டுநீர் பாசன சாதனத்தை அமைக்க விரும்புவர்களுக்கு தோட்டக்கலைத்துறை மானியம் வழங்குகிறது. குறு விவசாயிகளுக்கு முழு மானியத் தொகையான ஒரு ஏக்கருக்கு 43 ஆயிரத்து 816 ரூபாயும், பெரு விவசாயிகளுக்கு 75 சதவீதம் மானியமும் வழங்குகிறது. வேளாண்மை துறை பரிந்துரையால் பல விவசாயிகள் பலனடைந்து வருகின்றனர்.

கடந்த இரு ஆண்டுகளாக மழை குறைந்து மரவள்ளி சாகுபடி பரப்பு இப்பகுதியில் அதிரடியாக குறைந்தது. சிரமமின்றி பலன் தரும் பயிரான மரவள்ளியின் பக்கம் விவசாயிகளின் கவனம் மீண்டும் திரும்பியுள்ளது. இதையடுத்து தண்ணீர் பற்றாக்குறையை சமாளித்து பயிரை பாதுகாக்க சொட்டு நீர்பாசன முறையை அமைப்பதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

## கேழ்வரகு சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

**மயிலம்** : மயிலம் பகுதியில் கேழ்வரகு சாகுபடி செய்ய விவசாயிகள் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மயிலம் பகுதியில் இந்த ஆண்டு மழை குறைவாக பெய்ததால் ஏரி, குளங்களில் நீர் இல்லாமல் வறண்டு காணப்படுகிறது. இதனால் கிணறு, ஆழ் துளை கிணற்றில் நீர் மட்டம் குறைந்துள்ளது.

மயிலம், வீடூர், கணபதிப்பட்டு, ரெட்டணை, தீவனூர், கள்ளகொளத்தூர், செண்டூர் உள்ளிட்ட பல கிராமங்களில் விவசாயிகள் குறைந்த நீர் பாசனம் செய்யக்கூடிய கேழ்வரகு, எள், உளுந்து சாகுபடியை செய்ய துவங்கிவிட்டனர். விவசாயிகள் கேழ்வரகு விதைகளை தங்கள் நிலத்திலிருந்து தயார் செய்து கொள்கின்றனர். மார்கழி மாதத்தில் நெல் அறுவடை செய்தவுடன் கேழ்வரகு நாற்று விட்டு, புழுதி ஓட்டி, தொழுவுரம் அடித்து , பாத்திகள் தயார் செய்கின்றனர். நாற்று விட்ட 30ம் நாள் நடவு செய்கின்றனர். இந்த பட்டத்தில் நடும் கேழ்வரகு பயிரை பூச்சிகள் தாக்குவதில்லை.

நடவு செய்த 15ம் நாள் களை வெட்டிய பிறகு யூரியா தெளித்து விடுகின்றனர். பயிர் நன்றாக வளர்ந்து 90 நாட்களில் அறுவடைக்கு தயாராகும், ஒரு ஏக்கர் கேழ்வரகு சாகுபடி செய்தால் 10 மூட்டை வரையில் விளைச்சல் கிடைக்கிறது.சர்க்கரை நோயாளிகள் உணவில் கேழ்வரகு சேர்த்துக் கொண்டால்

உடலுக்கு நல்லது. வரும் கோடை வெப்பத்தின் தாக்கத்திலிருந்து விடுபட @கழ்வரகு உணவுகளை சாப்பிட்டால் உடலுக்குநல்லது.

## மானிய விலை வைக்கோல் வாங்க விவசாயிகளுக்கு அழைப்பு

**அன்னுார்** : 'மானிய விலையில் வைக்கோல் வாங்க விவசாயிகள் பெயர் பதிவு செய்து கொள்ளலாம்,' என அன்னுார் கால்நடை பராமரிப்பு துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தமிழக அரசு மானிய விலையில் வைக்கோல் வழங்கும் திட்டத்தை துவக்கியுள்ளது. இதன்படி, அன்னுார் கால்நடை மருத்துவமனை வளாகத்தில் நேற்று முன்தினம் வைக்கோல் விற்பனை துவங்கும் என அறிவிக்கப்பட்டது. பதுவம்பள்ளி, காடுவெட்டி பாளையம் விவசாயிகள் ஆர்வமாக வந்து காத்திருந்தனர். எனினும் வைக்கோல் லோடு வராததால், கால்நடை துறை மண்டல இணை இயக்குனர் முத்து கோபாலகிருஷ்ணன், துணை இயக்குனர் சுந்தரராஜன் ஆகியோர் விவசாயிகளுக்கு தீவன அட்டைகளை மட்டும் வழங்கினர்.வைக்கோல் தராததால் விவசாயிகள் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.நேற்று முன்தினம் வைக்கோல் விற்பனையை ஒன்றிய சேர்மன் கண்ணம்மாள் துவக்கி வைத்தார். ஒரு மாட்டுக்கு ஒரு நாளைக்கு மூன்று கிலோ வீதம் ஒரு வாரத்திற்கு தேவையான 21 கிலோ வைக்கோல் வழங்கப்படுகிறது.கால்நடை பராமரிப்புத்துறை அதிகாரிகள் கூறியதாவது:வெளிமார்க்கெட்டில் கிலோ எட்டு முதல் 10 ரூபாய் வரை விற்கும் வைக்கோல் இங்கு இரண்டு ரூபாய்க்கு விற்கப்படுகிறது. கும்பகோணம் உள்ளிட்ட வெளியூர்களில் கிலோ ஏழு ரூபாய்க்கு வாங்கி விவசாயிகளுக்கு கிலோ இரண்டு ரூபாய்க்கு அரசு விற்பனை செய்கிறது. முதல் கட்டமாக 4,805 கிலோ வைக்கோல் இங்கு விற்பனைக்கு வந்துள்ளது.அன்னுார் வட்டாரத்தில் மானிய விலையில் வைக்கோல் தேவைப்படுவோர் அல்லப்பாளையம், எல்.கோவில்பாளையம், பொகலுார், கணேசபுரம், பொன்னே கவுண்டன் புதுார் ஆகிய இடங்களில் உள்ள கால்நடை மருந்தகங்களில் ரேஷன் கார்டு அசல், நகல் மற்றும் இரண்டு பாஸ்போர்ட் சைஸ் போட்டோவுடன் சென்று பெயர் பதிவு செய்து கொள்ளலாம்.இவ்வாறு அதிகாரிகள் தெரிவித்தனர்.நிகழ்ச்சியில் டாக்டர் தங்கவேல் உள்பட பலர் பங்கேற்றனர்.

## கறவை மாடுகளுக்கு குச்சி தீவனம்

**காரைக்குடி** : சிவகங்கை,ராமநாதபுரம் மாவட்டங்களில் செயல்பட்டு வரும், பால் உற்பத்தியாளர், கூட்டுறவு சங்க உறுப்பினர்களின், கறவை மாடுகளுக்கு, அவர்கள் ஒன்றியத்துக்கு வழங்கும் பால் அளவின் அடிப் படையில், கிலோ ஒன்றுக்கு ரூ.4 வீதம், சரிவிகித அடிப்படையிலான, குச்சி தீவனம், காரைக்குடி ஆவின் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. கறவை மாடுகளின் சினைபருவ காலத்தில், செயற்கை கருவூட்டல் முறையில், சினை ஊசி ஒன்றுக்கு, ரூ.5 மானியம் வழங்கி, மாடுகளுக்கு ரூ.7 மூலம் சினை ஊசி போடப்பட்டு வருகிறது. ராமநாதபுரம், சிவகங்கை மாவட்டங்களில் உள்ள அனைத்து கறவைமாடுகளுக்கும், கோமாரி நோயினை கட்டுப்படுத்தும் வகையில், இந்த மாதம் முழுவதும் தடுப்பூசி போடும் பணி நடக்கிறது. இந்த வாய்ப்பை பொதுமக்கள் பயன்படுத்தி கொள்ளலாம், என ஆவின் பொது மேலாளர் தங்கராஜன் தெரிவித்துள்ளார்.

## கத்தரிக்காய் உற்பத்தி விவசாயி சாதனை

**திருப்பூர்** : குஜராத்திலிருந்து விதை கொண்டு வரப்பட்டு, அரை கிலோ அளவிற்கு பெரிய அளவிலான கத்தரிக்காய், திருப்பூர் அருகே உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

திருப்பூர், மங்கலம்- பல்லடம் ரோடு, களத்துக்காடு பகுதியை சேர்ந்த விவசாயி, பரிசோதனை முயற்சியாக, குஜராத்திலிருந்து கத்தரி விதை தரு வித்து, நடவு செய்துள் ளார். செடி முளைத்து, அதில் பெரிய அளவிலான கத்தரிகாய்கள் கிடைக்கிறது.

வழக்கமான கத்தரி போல், அல்லாமல் வித்தியாசமாக பெரிய அளவி லான கத்தரி காய்கள் விளைகின்றன. இவை, 250 கிராம் முதல் 400 கிராம் வரை உள்ளன. விதை இல்லாததோடு, சதை பிடிப்பும் அதிகமாக உள்ளது. 30 செடிக்கு, ஒரு முறைக்கு 20 கிலோ வரை கத்தரிகாய் கிடைக்கிறது. செடியில் முட்கள் உள்ளதால், ஆடு, மாடுகள் தொல்லை இல்லை.

விவசாயி சிங்கராஜ் கூறியதாவது: குஜராத்திலி ருந்து விதையை தருவித் தேன். "பாலி ஹைபிரிட் 1' என பாக்கெட்டில் இருந்தது. பரிசோதனைக்காக சிறிய

அளவில், 30 செடிகள் நடவு செய்யப்பட்டது. உரம் எதுவும் போடவில்லை; நடவு செய்யும்போது, தொழு உரம் மட்டும் போடப்பட்டது.

கத்தரியின் பூ, காயும், எதிர்பார்த்ததைவிட பெரியதாக கிடைத்தது. ஒரு காய், கால் கிலோ முதல் அரை கிலோ வரை உள் ளது. வாரத்துக்கு ஒரு முறை 20 கிலோ வரை கிடைக்கிறது. கிலோ 20 முதல் 30 ரூபாய் வரை விற்கிறது.அடுத்த முறை கூடுதலாக சாகுபடிசெய்ய திட்டமிட்டுள்ளேன். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### கிராம குளங்களுக்கு தண்ணீர் நிரப்ப அரசு உத்தரவு

**உடுமலை** : உடுமலை பகுதியில், நிலவும் வறட்சி காரணமாக, நிலத்தடி நீர் மட்டத்தை மேம்படுத்தவும், குடிநீர் தேவைக்கும் பி.ஏ.பி., திட்டத்தின் கீழ் கிராம குளங்களுக்கு தண்ணீர் நிரப்ப அரசு உத்தரவிட்டுள்ளது. உடுமலை சுற்றுப்பகுதியில், பிரதானமாக உள்ள விவசாயத்திற்கு உறுதுணையாக வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவமழை உள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக இரு பருவமழைகளும் இப்பகுதியில் பெய்யவில்லை. 2012 ம் ஆண்டில், 360 மி.மீ., மற்றும் 2013 ல் 527 மி.மீ., மழையளவு மட்டுமே உடுமலை பகுதியில் பெய்தது. இந்தாண்டு இதுவரை மழையளவு இப்பகுதியில் பதிவாகவில்லை. மிக குறைவாக கடந்த இரண்டு ஆண்டுகளில், பெய்த மழை காரணமாக, உடுமலை சுற்றுப்பகுதிகளில் கடும் வறட்சி நிலவுகிறது. பல்வேறு கிராமங்களின் குடிநீர் ஆதாரமாக உள்ள போர்வெல்கள் வற்றியதுடன், விவசாய சாகுபடியில் கிணற்றுப்பாசனம் முற்றிலுமாக முடங்கியது.

ஆயிரக்கணக்கான தென்னை மரங்கள் தண்ணீரின்றி கருகியதுடன், கிராமங்களில் குடிநீர் தட்டுப்பாடும் நிரந்தரமானது. குறிப்பாக, குடிமங்கலம் ஒன்றிய கிராமங்களில், நிலத்தடி நீர் மட்டம் அகலபாதாளத்திற்கு சென்று பாதிப்பை அதிகரித்தது.

இதற்கு ஒரே தீர்வாக, பி.ஏ.பி., திட்டத்தில், கிராமக்குளங்களுக்கு தண்ணீர் வழங்க வேண்டும் என பல மாதங்களாக கோரிக்கை விடப்பட்டு வருகிறது. பி.ஏ.பி., நான்காம் மண்டல பாசன நிறைவின் போது, இக்கோரிக்கை குடிமங்கலம் பகுதியில் தீவிரப்படுத்தப்பட்டது. பல்வேறு காரணங்களால், குளங்களுக்கு பி.ஏ.பி., திட்டத்தில் தண்ணீர் வழங்க முடியாத நிலை ஏற்பட்டது. வறட்சி உடுமலை ஒன்றிய கிராமங்களிலும் துவங்கிய நிலையில், குளங்களுக்கு

தண்ணீர் வழங்க கோரி, பொதுப்பணித்துறை அமைச்சருக்கு தொடர் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. இதற்கு, பி.ஏ.பி., பாசன விவசாயிகள் மற்றும் பாசனசபையினர் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இவ்வாறு, பல மாதங்களாக நீடித்த பிரச்னைக்கு முற்றுப்புள்ளி வைக்க பி.ஏ.பி., திட்டத்தில் குளங்களுக்கு தண்ணீர் வழங்க அரசு உத்தரவு வெளியிட்டுள்ளது. முதலாம் மண்டல பாசன நிறைவு பெற்றதும், குடிநீர் மற்றும் இதர தேவைகளுக்காக குளங்களுக்கு தண்ணீர் வழங்க அரசு உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய முதலாம் மண்டல பாசனத்திற்கே போதிய தண்ணீர் வழங்க முடியுமா என்ற கேள்வி எழுந்துள்ள நிலையில், குளங்களுக்கு தண்ணீர் வழங்குவது கேள்விக்குறியாக உள்ளது.

பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறுகையில், மண்டல பாசனம் முடிவுற்றதும், குளங்களுக்கு தண்ணீர் திறக்க உத்தரவு வெளியிடப்பட்டுள்ளது. தொகுப்பு அணைகள் மற்றும் திருமூர்த்தி அணையின் நீர் இருப்பை பொறுத்தே குளங்களுக்கு தண்ணீர் வழங்க முடியும்', என்றனர்.

## கோபுர கலசங்களில் நவதானியங்கள் ஏன்?

**மடத்துக்குளம்** : கும்பாபிேஷகத்தின் போது கோபுரகலசங்களில் கட்டப்படும் நவதானியங்கள் பல நூறு ஆண்டுகளுக்கு முன் இருப்பு விதைகளாக பயன்படுத்தப்பட்டது என வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் செல்வராஜ் கூறினார். கோவில் கும்பாபிேஷகத்தின் போது நவதானியங்கள் (ஒன்பது வகை தானியங்கள்) உள்ள முடிப் புகளை கோவிலில் உள்ள கோபுர கலசங்களில் கட்டி வைப்பது மிக முக்கிய சடங்காகும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தொடங்கிய வழக்கம் இன்றும் நடை முறையில் உள்ளது. பல தலைமுறைகளை கடந்த பின்பும் உள்ள இந்த பாரம்பரிய வழக்கம் குறித்து மடத்துக்குளம் வேளாண்மைத்துறை உதவி இயக்குனர் செல்வராஜ் கூறியதாவது: கோவில்களில் கோபுரங்கள் அமைத்து வழிபட தொடங்கிய காலங்களில், பத்து அடிக்கும் அதிகமான உயரங்களில் சாதாரண மக்களின் வீடுகள் இல்லை. மண் சுவர்கள் அமைக்கப்பட்ட பனை மற்றும் தென்னை ஓலைகளை மேற்கூரைகளாக பயன்படுத்தினர். மன்னர் மற்றும் அவருக்கு இணையாக உள்ளவர்கள் மட்டுமே மரம் மற்றும்

சுண்ணாம்புகாரையால் ஆன மேற் கூரைகளை அமைத்துக் கொள்ளலாம். இந்த காலகட்டத்தில் விவசாயம் மட்டுமே மிக முக்கிய தொழிலாக இருந்தது. அடிப்படை கட்டமைப்பு மற்றும் நீர் தேக்க வசதிகள் இல்லாத இந்த காலங்களில் பல கிராமங்கள் வெள்ளத்தால் அடித்து செல்லப்பட்டுள்ளன.

வெள்ளத்தாக்குதலுக்குபின் பலியானவர்கள் போக மீத முள்ளவர்கள் மீண்டு வந்தாலும், அவர்களின் உணவு தேவைக்கு விவசாயம் செய்ய வேண்டும். விவசாயம் செய்ய விதைகள் தேவை. அப்படி தேவைப்படும் விதைகளை வெள்ளத்திலிருந்து பாதுகாக்க ஒவ்வொரு வகை விதையையும் மூன்று முதல் ஐந்து கிலோ அளவில் துணியில் கட்டி ஒன்பது வகை விதைகளை (ராகி,கம்பு,சோளம்,நெல், சாமை, திணை, தட்டைப்பயிறு, பாசிபயறு, துவரை) கோபுரங்களிலுள்ள கலசங்களில் கட்டி வைத்தனர்.

மூன்று கிலோ நெல் ஒரு ஏக்கர் விளைச்சல் வழங்கும். இந்த அடிப்படையில் கணக்கீடு செய்தால் 27 முதல் 30 ஏக்கருக்கு தேவையான விதைகளை நமது முன்னோர்கள் அனைத்து காலகட்டங்களிலும் கோவில்களில் வைத்து காத்துள்ளனர். தற்போது இந்த நவதானியங்கள் மிக குறைந்த அளவில் வழக் கத்துக்காக (பார்மாலிட்டி) கட்டப்படுகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

## 'பிரியாணி' அரிசி அறுவடை அமோகம் :பிள்ளையாக பார்த்ததற்கு பலன்

அழகர்கோவில்: அழகர்கோவில் பகுதியில் சீரக சம்பா சாகுபடி செய்திருந்த விவசாயிகள், தண்ணீர் தட்டுப்பாடு இன்றி, வெற்றிகரமாக அறுவடை செய்தனர்.

பிரியாணி என்றாலே சீரக சம்பா அரிசியின் மணமும், சுவையும் தான் நினைவிற்கு வரும். நெல் சாகுபடியில் அதிக விலை இந்த நெல்லிற்கு தான் கிடைக்கும். அனைத்து மண்களிலும் இந்த சீரக சம்பா நெல் வளராது. அழகர்கோவில் அருகே தலக்குளம், பிடக்காவாய்கால் பகுதியில் சில விவசாயிகள் இரண்டு ஏக்கர், மூன்று ஏக்கர் என சாகுபடி செய்துள்ளனர்.

தற்போது இதன் அறுவடை நடந்து வருகிறது.

விவசாய தம்பதிகள் சுப்பையா, அழகுபிள்ளை கூறியதாவது:

ஒரு ஏக்கரில் 50 மூடை நெல் கிடைத்தால், சீரக சம்பா நெல் 40 மூடை தான் கிடைக்கும்.

ஆனால், விலை ஒரு மூடை 67கிலோ ரூ. 2,700. ஒரு கிலோ நெல் ரூ. 40 வரை கிடைக்கும். விதை நெல் நாங்கள் விலைக்கு தான் வாங்குகிறோம். கிலோ ரூ.50.

நத்தம் பகுதி விவசாயிகள் வீட்டிற்கே வந்து இந்த நெல்லை கொள்முதல் செய்வார்கள். கடுமையான தண்ணீர் தட்டுப்பாடு இருந்தும், மோட்டார் மூலம் பயிரை காப்பாறினோம்.

மூன்றரை ஏக்கரில் சாகுபடி செய்திருந்தோம். சில ஆண்டுகளாக இதே ரகத்தை தான் சாகுபடி செய்கிறோம்.

15 நாட்களுக்கு ஒரு முறை மருந்து அடிக்க வேண்டும். தண்ணீர் அதிகம் பாய்ச்ச வேண்டும்.

சுருங்க சொன்னால் பிள்ளையை பார்ப்பது போல், இதை கண்ணும் கருத்துமாக கண்காணிக்க வேண்டும். தினமும் இரு முறை வயலில் சென்று பார்ப்போம். 105 நாட்களில் அறுவடை செய்து விடலாம், என்றனர்.

## மல்லிகைப் பூ விலை மணக்குது

**மதுரை** : மதுரை மார்க்கெட்டில் மல்லிகைப்பூ வரத்து அதிகரிப்பால், கடந்த சில நாட்களாகவே விலை வெகுவாக குறைந்துள்ளது.

மதுரை பூவியாபாரிகள் சங்கத் தலைவர் சோ.ராமச்சந்திரன் கூறியதாவது: மதுரையில் மல்லிகைப்பூவின் நேற்றைய விலை கிலோவுக்கு ரூ. 100 முதல் 120. மெட்ராஸ் மல்லி 150, பிச்சி 150, அரளி 60, ரோஸ் 50, பட்டன்ரோஸ் 80, கேந்திப்பூ 40, செவ்வந்தி 120, மரிக்கொழுந்து 40, சம்பங்கிப்பூ 70, வாடாமல்லி 40, துளசி 40, கோழிக்கொண்டை 50க்கு விற்றது.

பனிகுறைந்து விட்டதால் மல்லிகைப்பூ வரத்து அதிகரித்துள்ளது. இதனால் கடந்த சிலநாட்களாகவே விலை வெகுவாக குறைந்துள்ளது. ரூ. ஆயிரத்தை தாண்டி விற்ற மல்லிகை, நேற்று ரூ. 100 வரை குறைந்தது. மல்லிகை பூ விலை குறைவால், மற்ற பூக்களின் விலையும் குறைந்தே விற்பனையானது, என்றார்.

## கொடைக்கானலில் இரவு நேரங்களில் மழை

**கொடைக்கானல்** : கொடைக்கானலில் கடந்த 3 நாட்களாக இரவு நேரத்தில் கோடை மழை பெய்து வருகிறது. இரவு 10 மணி முதல் பெய்யும் மழை குறைந்தபட்சம் 20 நிமிடம் முதல் அதிகபட்சமாக 30 நிமிடம் வரை பெய்கிறது. மார்ச் 2 ல் 8.5 மி.மீ., மார்ச் 3ல் 3 மி.மீ., மார்ச் 4 ல் 7 மி.மீ., மழை, கொடைக்கானல்

போட் கிளப்பில் பதிவாகியுள்ளது. கொடைக்கானலில் பனி முடிவுக்கு வந்து கோடைக்காலம் துவங்கி விட்டதன் அறிகுறியாகவே கோடை மழை பெய்து வருகிறது. கொடைக்கானலில் நேற்று பகற்பொழுதில் அதிகபட்ச வெப்பநிலை 17 டிகிரி செல்சியசாகவும், இரவில் குறைந்தபட்ச வெப்பநிலை 9 டிகிரி செல்சியசாகவும் இருந்தது.

காற்றின் வேகம் 8 கி.மீ., ஆகவும், காற்றில் நிலவிய ஈரப்பதம் 42 சதவீதமாகவும் இருந்தது.

## வனவிலங்குகளை விரட்டுவதற்கு தேனி வனத்திற்குள் அலறல் ஓசை

**தேனி** : தேனி மாவட்ட மலைப்பகுதிகளில், விளை நிலங்களுக்குள் புகுந்து நாசம் செய்யும் வனவிலங்குகளை விரட்ட விவசாயிகள், தோட்டங்களில் ஸ்பீக்கர்களை கட்டி அலற விட்டு வருகின்றனர்.

தேனி மாவட்ட மலைப்பகுதிகளில் கடலை, வாழை, வெண்டைக்காய், பீன்ஸ், கீரைவகைகள், புதினா, மல்லி, உட்பட தோட்டக்கலை பயிர்களை சொட்டு நீர் பாசனம் முறையில் அதிகம் சாகுபடி செய்கின்றனர். தற்போதைய வறட்சி காரணமாக வனத்திற்குள் எங்குமே தண்ணீர் கிடைக்கவில்லை. இதனால் காட்டு மாடுகள், கேழையாடுகள், சிறுத்தைகள், யானைகள் உட்பட வனவிலங்குகள் விவசாய விளை நிலங்களுக்குள் புகுந்து பயிர்களை நாசம் செய்கின்றன. சில நேரங்களில் வனவிலங்குகளால் விவசாயிகளின் உயிருக்கும் ஆபத்து ஏற்படுகிறது. நேற்று, விளைநிலங்களுக்குள் புகுந்த காட்டுமாடுகள் பயிர்களை நாசம் செய்தன.

வனவிலங்குகளை அடித்து விரட்டுவது சட்டப்படி குற்றம். சாத்தியமில்லாத செயலும் கூட. எனவே, விவசாயிகள் தோட்டங்களில் ஸ்பீக்கர்களை கட்டி, வெடி வெடிப்பது போலவும், யானை பிளிறுவது போலவும் பதிவு செய்து, போட்டு வருகின்றனர். இந்த வெடிச்சத்தம், யானை பிளிறும் சத்தங்களை கேட்டதும், வனவிலங்குகள் ஓடிப்போய் விடுகின்றன. இரவில் தோட்டங்களுக்குள், சில மணி நேரத்திற்கு ஒருமுறை இப்படி வெடிச்சத்தத்தை ஸ்பீக்கரில் போடுகிறோம். எனவே வனவிலங்குகள் தொல்லை அறவே இல்லை, என விவசாயிகள் தெரிவித்தனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### 6 கோடிக்கு பருத்தி விற்பனை



**அரூர்:** அரூர் கூட்டுறவு வேளாண்மை உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பில் இந்த வாரம் நடந்த பருத்தி ஏலத்தில் ஆர்சிஎச் ரக பருத்தி குவிண்டால் யி4900 முதல் 5450 வரையிலும், வரலட்சுமி (டிசிஎச்) ரகம் யி5100 முதல் 6800 வரை ஏலம் போனது. கடந்த இரண்டு வாரத்தில் வரலட்சுமி ரக பருத்தி குவிண்டாலுக்கு யி1400 வரை குறைந்துள்ளது. பருத்தியின் தரம் குறைவாக இருந்ததும், இந்த ரக பருத்திக்கு தேவை குறைவாக இருப்பதே இதற்கு காரணமாக கூறப்படுகிறது. கடந்த 20.1.14 ம் தேதி 7 வாரம் நடைபெற்ற ஏலத்தில் 21645 மூட்டை பருத்தி யி5.87 கோடிக்கு ஏலம் போனது.

### விலை வீழ்ச்சி எதிரொலி சின்ன வெங்காயம் பட்டறைகளில் சேமிப்பு



**கோவை:** தமிழகத் தில் கடந்த ஆகஸ்ட் முதல் நவம்பர் மாதம் வரை சின்னவெங்காயம் வரத்து குறைந்திருந்தது. இதனால், விலை கடுமையாக உயர்ந்து ஒரு கிலோ சின்னவெங்காயம் யி80க்கு விற்கப்பட்டது. வெங்காய விவசாயிகள் சாகுபடி முதலீட்டை விட 3 மடங்கு தொகை யை லாபமாக பெற்றனர். இந்நிலையில் டிசம்பர் மாதம் முதல் வெங்காய சீசன் ஆரம்பித்து விளைச்சல் அமோகமாக இருந்ததால், மார்க்கெட்டுகளில் தேவைக்கும் அதிகமாக வரத்து இருந்தது. இதனால், விலை கடுமையாக குறைந்து யி80க்கு விற்ற சின்னவெங்காயம் ஒரு கிலோ யி18க்கு விற்றது. கடந்த வாரங்களில் மேலும் விலை குறைந்து ஒரு கிலோ யி14க்கு விற்றது. தொடர்ந்து விலை வீழ்ச்சி அடைந்து வருவதால் வெங்காய விவசாயிகள் முதலீட்டு நஷ்டத்தை தடுப்பதற்காக பட்டறைகள் அமைத்து சின்னவெங்காயங்களை சேமித்து வருகின்றனர். ஏப்ரல் மாதத்தில் சின்னவெங்காயத்திற்கு சீசன் முடிவடைந்து கடும் பற்றாற்குறை ஏற்படும். இதனால், கோவை ஆலாந்துறை, செம்மேடு பகுதிகளில் நூற்றுக்கணக்கான வெங்காய பட்டறைகள் அமைக்கப்பட் டுள்ளன. இதுகுறித்து டி.கே.மார்க்கெட் காய்கறி வியாபாரிகள் சங்க தலைவர் ராஜேந்திரன் கூறுகையில், 'சமீப காலமாக கோவை, திருப்பூர் சுற்றுவட்டாரங்களை சேர்ந்த வெங்காய விவசாயிகள் பட்டறைகள் அமைத்து சேமித்து வைக்கின்றனர். அதிக லாபத்தை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்' என்றார்.

**மஞ்சள் விலை உயர வாய்ப்பு**



நாமகிரிப்பேட்டை: தமிழகத்தில் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு தங்கத்திற்கு நிகராக மஞ்சள் விலை உயர்ந்தது. இதனால் விவசாயிகள் மஞ்சள் சாகுபடிக்கு தாவினர். உற்பத்தி அதிகமானதால் மஞ்சள் விலை குறையத்தொடங்கியது. மூட்டை யி10 ஆயிரத்திற்கு விற்றபோது கூட விலை ஏறும் என விவசாயிகள் மஞ்சளை இருப்பு வைத்தனர். ஆனால், விலை மிகவும் குறைந்து யி3,500க்கு விற்றது. ஒரு ஏக்கர் மஞ்சள் சாகுபடி செய்த விவசாயிகளுக்கு யி40 ஆயிரம் வரை நஷ்டம் ஏற்பட்டது. இந்த ஆண்டு சீசன் தொடங்கி முதல் வாரத்திலேயே மஞ்சள் மூட்டை யி9 ஆயிரத்தை தொட்டது. ஆனால், அடுத்த வாரமே யி7 ஆயிரமாக குறைந்துவிட்டது. இதுகுறித்து மஞ்சள் வியாபாரி கூறுகையில், ஏக்கருக்கு சராசரியாக 60 மூட்டை வரை விளையும் இடங்களில் கூட தற்போது அதிகபட்சமாக 15 மூட்டைகள் மட்டுமே விளைந்துள்ளது. தற்போது இருப்பு மஞ்சள் விற்பனைக்கு வருவதால் கொஞ்சம் குறைந்தாலும், சீசன் முடியும் மாதமான ஜுன், ஜுலை மாதங்களில் மஞ்சள் விலை யி12 ஆயிரத்தை தாண்டிவிடும் என்றார்.

**உரமுறைகேடுகள் நடவடிக்கை எடுக்காத அதிகாரிகளுக்கு எச்சரிக்கை**

**கோவை,** : கோவை மாவட்டத்தில் உள்ள உரக்கடைகளில் உர முறைகேடுகள் நடந்து, அதன் மீது நடவடிக்கை எடுக்காத உதவி இயக்குநர்கள், வேளாண் அலுவலர்கள் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து கோவை கலெக்டரின் நேர்முக உதவியாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:கோவை மாவட்டத்தில் உள்ள உரக்கடைகளில் விதிமீறல்கள் இருந்தாலோ உர விற்பனையில் முறைகேடுகள் நடைபெற்றா லோ யூரியா உரம் அதிக விலைக்கு விற்றாலோ தகுந்த நடவடிக்கை மேற்கொள்ள அனைத்து வட்டார வேளாண் உதவி இயக்குநர்களுக்கும் கலெக்டர் உத்தரவிட்டுள்ளார்.

வட்டாரங்களில் உர முறைகேடுகள் நடைபெறுவது கண்டுபிடிக்கப்பட்டு வேளாண் உதவி இயக்குநர்கள் மற்றும் வேளாண் அலுவலர்கள் உரிய நடவடிக்கை எடுக்க தவறும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட வேளாண் உதவி இயக்குர் மற்றும் வேளாண் அலுவலர் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கப்படும்.

இது தொடர்பாக விவசாயிகள் புகார் கொடுத்த உடனே அனைத்து வேளாண் உதவி இயக்குநர்களும் நடவடிக்கை எடுக்க வேண்டும். நடவடிக்கை எடுத்த விபரத்தினை 24 மணி நேரத்திற்குள் கலெக்டருக்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.இவ்வாறு கலெக்டரின் நேர்முக உதவியாளர் தெரிவித்துள்ளார்.

**ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்ற நெல் ரகத்தில் மட்டுமே மருத்துவ குணம் உள்ளது பாரம்பரிய நெல்சாகுபடி பயிற்சியில் தகவல்**

**திருத்துறைப்பூண்டி,** :திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி அருகே உள்ள ஆதிரெங்கம் கிரியேட் இயற்கை வேளாண் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் (தனியார்) இலவச பயிற்சி கிரியேட் அமைப்பின் சார்பில், பாரம்பரிய நெல் சாகுபடி குறித்தும், பாரம்பரிய விதை நெல் தேர்வு, விதை நேர்த்தி, விதை பாதுகாப்பு மற்றும் விதைநெல் கோட்டை கட்டும் செய்முறை பயிற்சி நடைபெற்றது. மேலாண்மை அறங்காவலர் பொன்னம்பலம் தலைமை வகித்தார். பயிற்சி இயக்குநர் ஜெயராமன் முன்னிலை வகித்தார். தொழில்நுட்பம் குறித்து தமிழ்நாடு இயற்கை வேளாண் வல்லுனர் கூட்டமைப்பு தலைவர் சித்தர் பேசுகையில், சாதா நெல்லுக்கும் பாரம்பரிய நெல்லுக்கு உள்ள வித்தியாசம் இப்போதைய சூழ்நிலைக்கு தகுந்தாற்போல் பாரம்பரிய நெல் தன்னை தகவமைத்து கொள்ளும் தன்மை உடையது. ஒட்டுரகம் காலம் காலமாக தனது தன்மையை இழந்து விடும். ஆனால் பாரம்பரிய நெல் ஒவ்வொரு வருடமும் தனது சக்தியை அதிகரித்து கொள்ளும். தற்போது நாம் உண்ணும் உணவில் மரபணு தன்மை உள்ளது. உணவில் மட்டுமே நமக்கு நோயை ஏற்படுத்தாது. மரபணு தன்மை இல்லாத உணவு நோயை ஏற்படுத்தும். மண்ணில் உள்ள நுண்ணுயிர்கள் தான் நெல்லிற்கு வாசனை தருகிறது. தாவர விலங்கின் கழிவுகளை மண்ணில் போட்டு மக்க வைப்பதன் மூலம் நுண்ணுயிர்கள் பெருகும். நெல்லை நிழலில் தான் காய வைக்க வேண் டும். பல்லுயிர் பெருக்கம் என்பது இயற்கை விவசாயத்தில் மட்டுமே சாத்தியம். இடத்திற்கு தகுந்தார் போல் நெல்லை தேர்ந்தெடுக்க வேண்டும். ஒவ்வொரு பகுதிக்கும் ஏற்ற நெல் ரகத்தில் மட்டுமே நோயை குணமாக்கும் தன்மை உள்ளது என்றார்.

ஜி.டி. பவுன்டேசன் நிர்வாக இயக்குநரும், குழந்தைகள் நல மருத்துவர் ராஜா பேசுகையில், 12 ஆண்டுகளுக்கு பிறகு தற்போது 10 ஏக்கரில் இயற்கை விவசாயம்

செய்துள்ளேன் என்றார். இயற்கை விவசாயிகள் பாண்டிச்சேரி லட்சுமி நாரயாணன், கரிகாலன் மற்றும் மதுரை திருநெல்வேலி, சிவகங்கை, ராமநாதபுரம், நாமக்கல், திருச்சி, பாண்டிச்சேரி, திருவாரூர், நாகை உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலிருந்து விவசாயிகள் கலந்து கொண் டனர். ஒருங்கிணைப்பாளர் செந்தில்குமார் நன்றி கூறினார்.

### கோமாரி நோய் தடுப்பு முகாம்

**காஞ்சிபுரம், :** காஞ்சிபுரம் கலெக்டர் பாஸ்கரன் வெளியிட்டுள்ள அறிக்கை: மாவட்டத்தில் கடந்த 1ம்தேதி முதல் 21ம்தேதி வரை கால்நடைகளுக்கு 6வது சுற்று கோமாரி நோய் தடுப்பூசி போடப்படுகிறது. இதற்காக, 4,42,000 டோஸ் கோமாரி நோய் தடுப்பூசி மருந்து வரவழைக்கப்பட்டுள்ளது. பசு, எருது, எருமைகள் மற்றும் 4 மாதங்களுக்கு மேலான கன்றுகளுக்கு அந்தந்த ஊராட்சிகளில் முகாம் நடத்தி தடுப்பூசி போடப்படுகிறது. எனவே, கோமாரி நோய் தடுப்பூசி போட்டு கால்நடைகளை பாதுகாத்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

### ரூ.3.70லட்சம் நேந்திரன் வாழைத்தார் ஏலம்

**அனுப்பர்பாளையம்,** : வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்க அவினாசி மையத்தில் நேந்திரன் வாழைத்தார் ஏலம் நேற்று நடந்தது. 4ஆயிரம் வாழைத்தார் ஏலத்துக்கு வந்தது. வாழைத்தார் கிலோ ஒன்றுக்கு ரூ.3 வரை அதிகரித்து, ரூ.15 முதல் ரூ.22 வரை விலை போனது. கதளி வாழைத்தார் வரத்து இல்லை. மொத்தம் ரூ.3.70 லட்சம் வரை ஏலம் போனது. இதில், 150 விவசாயிகள் மற்றும் 6 வியாபாரிகள் பங்கேற்றனர். கடந்த வாரத்தை விட 350 வாழைத்தார் வரத்து குறைந்து, விலை அதிகரித்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

### கரூர் பூ மார்க்கெட்டில் பூக்கள் விலை குறைந்தது

**கரூர்,**: முகூர்த்த சீசன் இல்லாததால் கரூர் மார்க்கெட்டில் பூக்கள் விலை குறைந்தது. கரூர் மாரியம்மன் பூ மார்க்கெட்டுக்கு கரூர் மாவட்டத்தில்

வேலாயுதம்பாளையம், நொய்யல், நாமக்கல் மாவட்டம் பரமத்தி, வேலூர், திண்டுக்கல் மாவட்டம் பாளையம், குஜிலியம்பாறை உள்ளிட்ட ஊர்களில் இருந்து பூக்கள் விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது.

வறட்சி காரணமாக பூக்களின் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. பின்னர் காவிரிநீர் வரத்து காரணமாக விளைச்சல் அதிகமானது. கார்த்திகை, மார்கழி, தை மாதங்களில் பூக்களின் விலை மிக அதிகமாக இருந்தது. முகூர்த்தம் காரணமாக கடந்த வாரமும் அதிகவிலைக்கு பூக்கள் ஏலம் போனது.

மல்லிகை பூ கிலோ ரூ.500க்கு மேல் போனது. இந்நிலையில் நேற்று பூக்களின் விலை வெகுவாக குறைந்துவிட்டது. ஒருகிலோ மல்லிகை ரூ.200, ஜாதிப்பூ ரூ.250, மருவு ரூ.40, ரோஜா ரூ.70, கனகாம்பரம் ரூ.150, செவ்வந்தி ரூ.120, கோழிகொண்டை ரூ.50, சம்பங்கி ரூ.200க்கு விலைபோனது.

மார்க்கெட்டுக்கு பூக்களின் வரத்து சுமாராக உள்ளது. விழாக்காலம் காரணமாக அதிக விலைக்கு ஏலம்போன பூக்கள் தற்போது முகூர்த்த சீசன் இல்லாததால் விலை குறைந்து விட்டது என கரூர் பூமார்க்கெட் சங்க தலைவர் முருகேசன் தெரிவித்தார்.

### குரும்பபட்டியில் வேளாண்மை திட்ட பயிற்சி

**கடலூர்,**:கடலூர் ஒன்றி யம் பாலவிடுதி ஊராட்சி குரும்பபட்டியில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப பயிற்சி நடந்தது. 50 விவசாயிகள் கலந்து கொண்டனர். தோட்டக்கலைத் துறையில் செயல்படுத்தப்பட்டு வரும் திட்டங்களான காய்கறி சாகுபடி, பந்தல் காய்கறி, கொடி வகை சாகுபடி, குழிதட்டு நாற்றாங்கால் தயாரித்தல், சொட்டு நீர் பாசனக் கருவி அமைத்தல், நிழல் வலை கூடாரம் அமைத்தல், மூடாக்கு அமைத்தல் பழப்பயிர் சாகுபடி, மலர்கள் சாகு படி போன்ற பலவகை தொழில் நுட்பங்கள் பற்றி பயிற்சியில் எடுத்துக் கூறப்பட்டது.

இதில் வெற்றியடைந்த விவசாயிகளின் அனுபவம் குறித்து தெரிவிக்கப்பட்டது. மேலும் விவசாயிகளை நேரடியாக வயல்வெளிக்கு அழைத்துச் சென்று நிழல் வகை கூடாரம், குழிதட்டு நாற்றாங்கால், பந்தல் சாகுபடி, சொட்டு நீர் பாசன வயல் ஆகியவற்றை காண்பித்து செயல்விளக்க பயிற்சி அளிக்கப்பட்டது.

தோட்டக்கலை உதவி இயக்குநர் வீரமணி தலைமை வகித்தார். புழுதேரி வேளாண் அறிவியல் தோட்டக்கலைத் துறை பயிர் வல்லுநர் கனகராஜ் தொழில்நுட்ப கருத்துகளை கூறினார். கடலூர் வேளாண்மை உதவி இயக்குநர் ஜெயந்தி கலந்து கொண்டு ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு முறைகளை விளக்கினார். பினோலக்ஸ் சொட்டுநீர் பாசன நிறுவன தொழில் நுட்ப உதவியாளர் ரவி கலந்து கொண்டு சொட்டு நீர் பாசன கருவி களை பராமரிப்பது பற்றி எடுத்துக் கூறினார். சொட்டு நீர் பாசனம் அமைத்ததால் அடைந்த பயன்கள் பற்றி காளையப்பட்டி விவசாயி செந்தமிழ்ச்செல்வன், பந்தல் சாகுபடியில் தான் பெற்ற வருமானத்தை பற்றி வெரியம்பட்டி ரத்தினகிரி ஆகியோர் பேசினர்.

பாலவிடுதி ஊராட்சி தலைவர் மருதாம்பாள் கலந்து கொண்டார். தரகம்பட்டி தோட்டக்கலை அலுவலர் நாகராஜன் நன்றி கூறினார். ஏற்பாடுகளை வேளாண் உதவி அலுவலர் சரவணன் செய்திருந்தார்.

## கால்நடைகளுக்கு ஆண்டுக்கு இருமுறை தடுப்பூசி அவசியம் மண்டல இணை இயக்குனர் அறிவுறுத்தல்

**க.பரமத்தி:** கால்நடைகளுக்கு வருடத்திற்கு இருமுறை கட்டாயம் தடுப்பூசி போட வேண்டும் என்று கோமாரி நோய் தடுப்பூசி முகாமில் மண்டல இணை இயக்குனர் தங்கராஜ் வலியுறுத்தினார்.

க.பரமத்தி ஒன்றியம் க.பரமத்தி ஊராட்சி காளிபாளையத்தில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது. விழாவிற்கு வந்தவர்களை கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் குழந்தைசாமி வரவேற்றார். ஊராட்சி தலைவர் தங்கவேல், ஒன்றிய கவுன்சிலர் லதாமணிசெந்தில், மண்டல துணை இயக்குனர் பழனிவேல், நோய் புலனாய்வு பிரிவு உதவி இயக்குனர் முருகேசன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மண்டல இணைஇயக்குனர் தங்கராஜ் முகாமை தொடங்கி வைத்து பேசியதாவது: கோமாரிநோய் கால்நடைகளை தாக்கி பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் கொடிய தொற்றுநோயாகும். இந்நோயை கிராமப்புறங்களில் கால் கட்டு, வாய்ச்சப்பை என்பர். இந்த நோய் விரைவில் பரவக்கூடிவை. நோயுற்ற கால்நடைகளில் கடும் காய்ச்சல், வாய், நாக்கு, மடி, காம்பு, குளம்புகளுக்கு

இடையே கொப்பளங்கள் புண்கள் காணப்படும். இந்நோயுற்ற கால்நடைகளின் உமிழ்நீர், சிறுநீர், பால், சாணம், உபயோகப்படுத்திய தண்ணீர், தீவனத்தொட்டிகள், தீவனம், காற்று மூலம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இந்த வியா தியை பரவுகின்றன. இந் நோய் தாக்குதலால் கறவை கால்நடைகளின் பால் உற்பத்தி பாதிக்கப்படுவது டன் சினைப்பிடிப்பது தடைபடும். பாதிக்கப்பட்ட மாடுகளின் பாலை இளம்கன்றுகள் குடிப்பதன் மூலம் குட்டிகள் பாதிக்கப்பட்டு இறக்க நேரிடும். கடந்த வருடம் இந்நோய் தாக்குதலினால் பல மாவட்டங்க ளில் கால்நடைகள் வெகு வாக பாதிக்கப்பட்டன. கரூர் மாவட்டத்தில் முற்றிலும் தடுக்கப்பட்டு பராமரிக்கப்பட்டன. எனவே கால்நடைகளில் அதிக பொருளாதார இழப்பை ஏற்படுத்தும் கோமாரி நோயை தடுக்க தற்போது 6வது சுற்றாக கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் அனைத்து கிராமங்களிலும் இலவசமாக தடுப்பூசி போடும் பணி நடந்து வருகிறது. வருகிற 21ம்தேதி வரை தடுப்பூசி பணி நடைபெறுகிறது. எனவே பண்ணையாளர்கள் அனைவரும் தங்கள் அனைத்து கால்நடைகளையும் தடுப்பூசி அளிக்கும் இடத்திற்கு கொண்டுசென்று, கோமாரி நோய் தடுப்பூசியை முன்னெச்சரிக்கையாக போட்டு கால்நடைகளை பாதுகாத்திட வேண்டும். ஏற்கனவே தடுப்பூசிகள் போட்டிருந்தாலும் மீண்டும் மாடுகளுக்கு தடுப்பூசி போட்டுக் கொள்ளலாம். வருடத்திற்கு 2 முறை (6 மாதங்களுக்கு ஒருமுறை) கட்டாயம் தடுப்பூசி வழங்குவது அவசியம். இவ்வாறு பேசினார். முடிவில் மருத்துவர் உஷா நன்றி கூறினார்.

**கோடை பயறு சாகுபடி பயிற்சி**

புதுக்கோட்டை, : குன்றாண்டார்கோவில் வட்டாரத்தில் திருமலைராயபுரம் கிராமத்தில் கோடை பயறு சாகுபடி குறித்த முனைப்பு இயக்கம் நடைபெற்றது. விழாவில் புதுகை மாவட்ட விதை சான்று உதவி இயக்குநர் வைத்தியநாதன், தலைமை வகித்து பேசுகையில், குறைந்த நாளில் நிறைந்த மகசூல் தரக்கூடிய பயறு வகை பயிர்களை சாகுபடி செய்து வருமானத்தை பெருக்கிட வேண்டும். உளுந்து சாகுபடி செய்வதற்கான தொழில்நுட்பத்துடன் உணவு தானிய உற்பத்தியை பெருக்கிட வேண்டும் என்றார். விழா வில் திருமலைராயபுரம் கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிர் உள்பட பலர் கலந்து கொண்டனர். இப்பயிற்சியில் பங்கேற்றவர்களுக்கு குன்றாண்டார்கோவில்

வேளாண் அலுவலர் மதியழ கன், உதவி வேளாண் அலு வலர் சத்தியசீலன் ஆகியோர் தொழில்நுட்ப கருத்து களை கூறி பயிற்சி அளித்தனர். ஏற்பாடுகளை அட்மா திட்ட தொழில்நுட்ப வல்லுநர்கள் நிஷா, பரிமளவாகன் மற்றும் சுப்ரமணியன் செய்திருந்தனர்.

**காளான் வளர்ப்பு பயிற்சி**

**புதுக்கோட்டை,** :புதுக்கோட்டையில் திருவரங்குளம் வட்டாரத்தை சேர்ந்த 9 நீர்வடி பகுதிகளில் உள்ள சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு காளான் வளர்ப்பு பயிற்சி நடைபெற்றது.

இப்பயிற்சியினை வேளாண் உதவி இயக்குனர் சிவக்குமார் துவக்கி வைத்தார். இதில் எம்.சி.ஏ. பவுண்டேசன் இயக்குனர் புஷ்பலீலா காளான் வளர்ப்பு குறித்து பயிற்சியளித்தார். பயிற்சியினை நீர்வடிப்பகுதி மேம்பாட்டு அணி உறுப்பினர் மதியழகன் ஒருங்கிணைத்தார். பயிற்சியில் கலந்துகொண்ட 50க்கும் மேற்பட்ட சுயஉதவிக்குழுவினருக்கு காளான் சூப்பு வழங்கப்பட்டது.

**மண்புழு உரம் நிலத்தின் நீர்ப்பிடிப்பை அதிகரிக்கிறது பயிற்சி முகாமில் தகவல்**

**புதுக்கோட்டை**, : தமிழ்நாடு அறிவியல் தொழில்நுட்ப மாநில மன்றத்தின் வழிகாட்டுதலில் புதுக்கோட்டை அரசு மகளிர் கலைக் கல்லூரியில் கைத்தொழில் பயிற்சி முகாம் கல்லூரி மாணவிகளுக்கும், மகளிர் சுய உதவிக்குழுவினருக்கும் நடந்து வருகிறது.

இம்முகாமிற்கு கல்லூரி முதல்வர் பானுமதி தலைமை வகித்தார். பேராசிரியர் சாந்தகுமாரி நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார். நிகழ்ச்சியில் புதுக்கோட்டை வம்பன் ஆராய்ச்சிக் கழக போராசிரியர் அசோகன் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பேசுகையில், இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகம் பற்றிய தகவல்களையும் அதில் வேளாண் பல்கலைக்கழகம் முதலில் பாண்டிச்சேரியில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழக நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டது எனவும், பின்னர் இது மத்திய அரசின் கீழ் செயல்பட்டு வருகிறது என வும், பயிர்களின் ரகங்கள், தோட்டக்கலை பயிர்கள், வேளாண் பொறி யியல் சாதனங்களால் உண்டாகும் நலன்கள் மற்றும் வேளாண் விற்பனை குறித்தும்

விளக்கினார். இவரை தொடர்ந்து வம்பன் ஆராய்ச்சி மைய பேராசிரியர் கிருஷ்ணமூர்த்தி பேசுகையில், மழை பற்றாக்குறை இருந்தபோதிலும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தியும் அதிகரித்துள்ளது. இதற்கு காரணம் மண்புழு உரம் போன்ற இயற்க்கை உரங்கள் பயன்படுத்துவதே ஆகும். மற்ற வேதி உரங்களின் விலை மூன்று மடங்கு அதிகரித்துள்ளது. இதனால் விவசாயிகள் அதிக மன உளைச் சலுக்கு ஆளாகின்றன. செயற்கை உரங்களினால் மண்வளம் குன்றுகிறது. மே லும் சரியான விளைச்சலும் கிடைப்பதில் லை. இந்த குறைபாடுகள் அனைத்தையும் நீக்குவதற்கு எளிய வழி மண்புழு உரம் போன்ற இயற்கை உரங்கள் தயாரித்து பயன்படுத்துவதே ஆகும்.

மண்புழு உரம் இடுவதானால் நிலத்தில் நீர்ப்பிடிப்பு தன்மையை அதிகரிக்கிறது. பயிர்களின் வேர் வளர்ச்சிக்கு உதவுகிறது. நுண்ணுட்டச்சத்து குறைப்பாட்டை நீக்குகிறது. நூற்புழுக்களிலிருந்து பாதுகாக்கிறது. தரமான விலைப்பொ ருள் கிடைக்கிறது. தட்பவெப்ப நிலைக்கு ஏற்ப மாற்றம் பெருகிறது. மண்புழுவில் 3 ஆயிரம் வகைகள் உள்ளன. இதில் மேல்மட்ட புழுக்கள், இடைமட்ட புழுக்கள், அடிமட்ட புழுக் கள் என மூன்று புழுக்கள் முக்கியமானதாகும். மண்புழு உரம் பெருமளவில் தயாரிக்க மேல்மட்ட புழு என அழைக்கப்படும் யுடிரில்லஸ் யுஜினியே என்ற புழு பயன்படுகிறது. நம்நாட்டில் பிரியோனிக்ஸ் எக்ஸகவேட்ஸ் என்ற புழுவினை பெருமளவில் பயன்படுத்துகின்றனர். மேலும் மண்புழு உரம் தயாரிப்பதற்கான பல்வேறு நிலைகள், மண்புழு உரத்தின் சத்துக்கள், லாபம் பற்றி விளக்கினார்.

நிகழ்ச்சியில் மாணவி கள், மகளிர் சுய உதவிக் குழு பெண்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## கோமாரி நோய் தடுப்பு சிறப்பு முகாம்

**திருமயம்,** : திருமயத்தை அடுத்த நெய்கோணத்தில் அரசின் சார்பில் கோமாரி நோய் சிறப்பு தடுப்பு முகாம் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் எம்எல்ஏ வைரமுத்து கலந்துகொண்டு கோமாரி நோய் தடுப்பு முகாமை துவக்கி வைத்து பேசுகையில், மருத்துவ முகாமை விவாசாயிகள் பயன்படுத்திக் கொண்டு கால்நடைகளை கோமாரி நோய் தாக்காமல் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றார். மேலும் முகாமில் வறுமைகோட்டிற்கு கீழே உள்ள 21

விவசாயிகளுக்கு இலவச வெள்ளாடுகளை வழங்கினார். விழாவில் ஒன்றிய குழுதலைவர் முத்துச்சாமி தலைமை வகித்தார்.

துணைத்தலைவர் ராமு முன்னிலை வகித்தார். அறந்தாங்கி உதவி கால்நடை மருத்துவர் சந்திரன், டாக்டர் சிவப்பிரகாசம், ஊராட்சித் தலைவர் சுப்புலட்சுமி, கிளைச்செயலாளர் ராமன் இணைச்செயலாளர் முருகேசன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

**நாகை, திருவாரூர் மாவட்டத்தில் கோமாரி நோய் மீண்டும் பரவுகிறது? மாடுகளுக்கு தடுப்பூசி போடும் பணி தீவிரம்**

**சீர்காழி**, : நாகை, திருவாரூர் மாவட்டத்தில் மாடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.

கடந்த 4 மாதங்களுக்கு முன் டெல்டா மாவட்டங்களில் மாடுகளை கோமாரி நோய் தாக்கியது. இதில் ஆயிரக்கணக்கான மாடுகள் இறந்தன. இந்நிலையில் மீண்டும் மாடுகளை கோமாரி நோய் தாக்கி வருவதாக கூறப்படுகிறது. எனவே நாகை, திருவாரூர் மாவட்டங்களில் பல்வேறு இடங்களில் மருத்துவ குழுவினர் முகாமிட்டு மாடுகளுக்கு கோமாரி தடுப்பூசி போட்டு வருகின்றனர்.

சீர்காழி அருகே பெருமங்கலம் ஊராட்சியில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நேற்று நடைபெற்றது. கால்நடை உதவி மருத்துவர்கள் பூமதி, கண்ணன், பயிற்சி கால் நடை ஆய்வாளர்கள் பேச்சியம்மாள், லெட்சுமி, கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் முத்தமிழ்ச்செல்வி, சுபாஷ்சந்திரன் முன்னிலை வகித்தனர். சுப்பிரமணியன் வரவேற்றார்.

ஊராட்சி தலைவர் ராம இளங்கோவன் கால்நடை தடுப்பு ஊசி முகாமை தொ டங்கி வைத்து பேசினார். முகாமில் 366 கால்நடைகளுக்கு தடுப்பு ஊசி போடப்பட்டது.

கால்நடை உதவி மருத்துவர் பூமதி பேசுகையில், கால்நடைகளுக்கு தற்போது கோமரி நோய் பரவ வாய்ப்புள்ளது. இந்த நோய் ஏற்பட்ட கால்நடைகளை தனியாக வைத்து பராமரிக்க வேண்டும். குறிப்பாக கலப்பின கால்நடைகளுக்கு அதிகமாக இந்த நோய் பரவுகிறது. கோமாரி நோய் ஏற்பட்டால் முதலில் மாடுகளுக்கு காய்ச்சல் ஏற்படும். அசை போடாது. அதிக மான தண்ணீர் குடிக்கும்.

வாயிலிருந்து நுரை கலந்த உமிழ் நீர் வெளியேறும். மாடுகளின் வாய் மற்றும் கால் குழம்புகளில் புண் ஏற்படும்.

இந்த நோயால் பாதிக்கப்பட்ட மாடுகளை, அதன் கன்றுகளுக்கு பால் ஊட்ட அனுமதிக்க கூடாது. அவ்வாறு கொடுத்தால் கன்றுகள் உடனே இறக்க நேரிடும். எனவே நோயுற்ற மாடுகளுக்கு பசும் தீவனம், காய்ச்சிய கஞ்சி கொடுக்க வேண்டும். புண் ஏற்பட்ட இடங்களில் பொட்டாசியம் பெர்மாங்கனெட் கரைசல் கொண்டு சுத்தமாக கழுவ வேண்டும். பின்பு பொரோ கிளிசரின் கலவையை புண்களுக்கு தடவேண்டும். வேப்பெண்ணெய் கொண்டு புண்களுக்கு சிகிச்சை அளிக்கலாம். மாடுகளை மாதம் ஒருமுறை கால்நடை மருத்துவரிடம் அழைத்துச்சென்று பரிசோதனை செய்து தடுப்பு ஊசி போட வேண்டும் என்றார். இதில் காமராஜ், ரவி, கணபதி, சம்பந்தம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். திருவாரூர் கலெக்டர் நடராஜன் உத்தரவின்பேரில் மாவட்டத்தில் உள்ள 10 ஊராட்சி ஒன்றியங்களிலும் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட 60 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர் கிராமம் கிராமமாக சென்று சினைமாடுகள், வண்டி மாடுகள், 4 மாத கன்று மற்றும் ஆடுகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டு வருகின்றனர்.

நீடாமங்கலம் ஒன்றியம் அதங்குடி கிராமத்தில் கோமாரி நோய் தடுப்பூசி போடும் முகாமை ஒன்றியக்குழு தலைவர் ராஜேந்திரன் தொடங்கி வைத்தார். கால் நடை உதவி இயக்குனர் லூர்துசாமி முன்னி லை வகித்தார்.

நீடாமங்கலம் கால் நடை மருத்துவர் மகேந்திரன் தலைமையிலான மருத்துவகுழுவில் டாக்டர்கள் பொதக்குடி சிவபிரகாஷ், கருவாக்குறிச்சி கோவிந்தராஜன், தளிக்கோட்டை ஜெயபால், வடுவூர் பிரேம்குமார், கால்டை ஆய்வாளர்கள் லெட்சுமி, செங்குட்டுவன், குருநாதன், கோதைநாயகி, மாலதி ஆகியோர் அதங் குடி, ஆய்குடி, வெள்ளக்குடி ,சித்தாம்பூர், அரிச்சபுரம், தேவங்குடி, கீழாளவந்தசேரி உள்ளிட்ட கிராமங்களில் 250 க்கும் மேற்பட்ட கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டனர்.

**கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் பெய்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி**

**சின்னமனூர்**, : தேனி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலாக பெய்த

மழையால் காய்ந்து வந்த நெற்பயிர்கள் தற்போது வளர்ச்சி அடைந்துள்ளன. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கம்பம் பள்ளத்தாக்கில் 14,707 ஏக்கர் பரப்பளவில் இரண்டாம் போகம் நெல் நடவு செய்யப்பட்டு 75 நாட்களுக்கு மேலாகிறது. இந்த பாசனத்திற்கு முல்லை பெரியாற்றில் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. பருவமழை சரிவர பெய்யாததால் அணையின் நீர்மட்டம் மளமளவென குறைந்து விட்டது. இதனால் சுமார் 70 சதவீத நெற்பயிர்கள் தண்ணீரின்றி வாடி வந்தன. இதனால் இரண்டாம் போக அறுவடை செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. சில விவசாயிகள் போர்வெல் நீரை பாய்ச்சி பயிர்களை காப்பாற்றி வந்தனர். இந்நிலையில் கேரள மலைப்பகுதியில் கடந்த ஒருவாரத்திற்கும் மேலாக மழை பெய்து வருகிறது. நீர்பிடிப்பு பகுதியில் பெய்த மழையால் பெரியாறு அணையின் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது. இதனால் கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளில் காய்ந்து வந்த நெற்பயிர்கள் வளர்ச்சி அடைய துவங்கி உள்ளன.

இன்னும் 2,3 நாட்கள் பரவலாக மழை பெய்தால் 70 சதவீத நெற்பயிர்களை காப்பாற்றி விடலாம். இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

**மானிய விலையில் வைக்கோல் விற்பனை**

**ஸ்ரீமுஷ்ணம்,** : ஸ்ரீமுஷ்ணம் கால்நடை மருத்துவமனையில் கால்நடை வைத்திருக்கும் விவசாயிகளுக்கு மானிய விலையில் உலர் தீவனம் (வைக்கோல்) வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. சிதம்பரம் கால்நடை உதவி இயக்குநர் சதாசிவம் கலந்து கொண்டு, மானிய விலையில் வைக்கோல் வழங்கி பேசுகையில்: மானிய விலையில் உலர் தீவனம் பெற விரும்புபவர்கள் குடும்ப அட்டை மற்றும் வாக்காளர் அடையாள அட்டையுடன் ஸ்ரீமுஷ்ணம் கால்நடை மருந்தகத்தில் பதிவு செய்து பயன் பெறுமாறு அறிவுறுத்தினார்.

நிகழ்ச்சியில் ஸ்ரீமுஷ்ணம் கால்நடை உதவி மருத்துவர் கணேசன், குடோன் (பொறுப்பு) கால்நடை உதவி மருத்துவர் கோமகன், கால்நடை ஆய்வாளர்

வேல்முருகன், பராமரிப்பு உதவியாளர் சாமியப்பன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சீரமைப்பு பணிக்காக ஊட்டி உழவர் சந்தை 7 நாள் மூடப்படுகிறது

**ஊட்டி,**: ஊட்டி உழவர் சந்தையில் நடைபாதை, கடைகள் மற்றும் கல்வாய் சீரமைப்பு பணி மேற்கொள்ளப்படுவதால்ஏழு நாட்களுக்கு உழவர் சந்தை மூடப்படுகிறது. இன்றே கடைசி நாள் என்பதால் பொதுமக்கள் காய்கறிகளை வாங்கி செல்ல விவசாயிகள் அழைப்பு விடுத்துள்ளனர்.

ஊட்டி உழவர் சந்தைக்கு நீலகிரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் மட்டுமின்றி, மேட்டுப்பாளையம், சிறுமுகை, அன்னூர், அவிநாசி போன்ற பகுதிகளில் இருந்து விவசாயிகள் நேரடியாக காய்கறிகளை கொண்டு வந்து இங்கு விற்பனை செய்கின்றனர்.இதனால், நீலகிரி காய்கறிகள் மட்டுமின்றி சமவெளிப்பகுதிகளில் விளையும் காய்கறிகள் நாள் தோறும் இங்கு கிடைப்பதால்,பொதுமக்கள் அதிகளவு நாடிச்செல்கின்றனர்.

குறிப்பாக வெளி மார்க்கெட்டை விட குறைந்த விலையில் காய்கறிகள்,புத்தம் புதிதாக கிடைப்பதால் ஊட்டி உழவர் சந்தையில்பொதுமக்கள் கூட்டம் அலைமோதும்.தற்போது, இந்த உழவர் சந்தையில் நடைபாதைகள், விற்பனை கூடங்கள் ஆகியவை சீரமைக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.இதனால், இடது புறம் இருக்கும் கடை மூடப்பட்டுள்ளன. விவசாயிகள் வலது புறம் உள்ள கடைகள் மற்றும் நடைபாதைகளில் காய்கறிகளை வைத்து விற்பனை செய்து வருகின்றனர். நாளை முதல் வலது புறம் உள்ள கடைகளின் முன்புறம் மராமத்து பணி மேற்கொள்ளப்படவுள்ளன. பொதுமக்கள் மற்றும் வியாபாரிகள் பயன்பெறும் வகையில் புதிதாக பொது கழிவறை ஒன்றும் கட்டப்படவுள்ளது. மேலும், கழிவு நீர் கால்வாயும் புதிதாக அமைக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் சென்றால் போதுமான இட வசதி இருக்காது. தள்ளு முள்ளு ஏற்படும். மேலும், மராமத்து பணி மேற்கொள்வதில் இடையூறு ஏற்படும் என்பதற்காக உழவர் சந்தைக்கு 7 நாட்கள் விடுமுறை அளிக்க தோட்டக்கலைத்துறை முடிவு செய்துள்ளது. எனவே, இன்று ஒரு நாள் மட்டுமே கடை இருக்கும். நாளை முதல் கடைகள் வைக்க கூடாது என வியாபாரிகளுக்கு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். எனவே, அனைத்து காய்கறிகளையும் இன்றே

விற்பனை செய்ய வியாபாரிகள் மும்முரம் காட்டி வருகின்றனர். அதே சமயம், இடது புறம் உள்ள கடைகளின் முன் புறத்தில் நடைபாதை சீரமைக்கப்பட்ட நிலையில் அங்கு கடைகளை திறக்க அனுமதி அளிக்க வேண்டும் என வியாபாரிகள் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர்.

ஆனால், கடைகள் திறந்தால், மக்கள் கூட்டம் அதிகமாக வரும் என்பதால் அனைத்து கடைகளையும் மூட அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர். எனவே, ஊட்டி பகுதிகளில் உள்ள மக்கள் இன்று பிற்பகல் 2 மணிக்குள் சென்றால், உழவர் சந்தையில் காய்கறி வாங்க முடியும். இல்லாவிட்டால் 7 நாட்கள் கழித்து தான் இங்கு காய்கறிகள் வாங்க முடியும்.

## 250 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி

**பாபநாசம்,** : அய்யம்பேட்டை அருகே சோமேஸ்வரபுரத்தில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் நேற்று முன்தினம் நடந்தது. முகாமில் 250 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப் பட்டது. முகாமில் கால்நடை உதவி மருத்துவர் ராஜா, பராமரிப்பு உதவி யாளர் கோபால், ஊராட்சி தலைவர் அன்பழகன், துணைத்தலைவர் வீரராகவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## தென்னைக்கு காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு

**ராமநாதபுரம்**,:ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகள் தென்னை மரங்களு க்கு காப்பீடு செய்யலாம் என உச்சிப்புளி வேளாண் மை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

வெள்ளம், புயல், வற ட்சி, பூச்சி நோய் தாக்குதல், தீ விபத்து மற்றும் இயற்கை சீற்றங்களால் தென்னை மரங்கள் முழுமையாகப் பாதிக்கப்பட்டாலோ அல்லது முற்றிலும் பலன் கொடுக்காத நிலை ஏற்பட்டாலோ தென்னை மர காப்பீட்டுத் திட்டம் மூலம் இழப்பீடு வழங்கப்படும். தென்னை சாகுபடி விவசாயிகள் தனிப்பயிராகவோ, ஊடு பயிராகவோ வரப்பில் வரிசையாகவோ, வீட்டு தோட்டத்திலோ குறைந்தபட்சம் பலன் தரக் கூடிய 5 மரங்களாவது சாகுபடி செய்திருக்க வேண்டும். வளமான ஆண்டுக்கு 30 காய்களுக்கு மேல் மகசூல் தரக்கூடிய மரங்கள் இத்திட்டத்தில் சேர்க்கலாம். குட்டை மற்றும் ஒட்டு ரகங்கள் 4

ஆண்டு முதலும் நெட்டை ரகங்கள் 7ம் ஆண்டு முதல் 60ம் ஆண்டு வரை காப்பீடு செய்யலாம். ஒரு ஹெக்டேருக்கு 135 மரங்கள் மட்டுமே காப்பீட்டு செய்ய தகுதியானவை.

விவசாயிகள் சாகுபடி செய்துள்ள மரங்களின் எண்ணிக்கை, வயது மற்றும் பராமரிப்பு பற்றிய சுய உறுதி முன்மொழிவு அளிக்க வேண்டும். தென்னை விவசாயிகள் தங்கள் அருகிலுள்ள வேளாண் விரிவாக்க மைய த்தை அணுகி முன்மொழிவு படிவத்தைப் பெற்று பூர்த்தி செய்து, பிரிமியத் தொகை யினை டிமாண்ட் டிராப்டாக செலுத்த வேண்டும்.

அதை தென்னை சாகு படி சிட்டா அல்லது அட ங்கல் இணைத்து வேளாண்ம துறை அலுவலகங்களில் சமர்ப்பிக்க வேண்டும். இந்தாண்டில் எந்த தேதியில் பிரிமியம் செலுத்தப்படுகின்றதோ அதற்கு அடுத்த மாதம் 1ம் தேதியில இருந்து ஒரு ஆண்டிற்கு பாலிசி வழங்கப்படும். பாலிசி தொடங்கி 1 மாத காலத்திற்குள் ஏற்படும் இழப்பிற்கு இழப்பீட்டு தொகை வழங்கப்படமாட்டாது. காப்பீட்டுத் தொகை மானியம் 50 சத வீதம், மத்திய அரசின் தெ ன்னை வளர்ச்சி வாரியமும், 25 சதவீதம் மாநில அரசும் செலுத்துகின்றன. மீதி 25 சதவீதம் விவசாயிகள் செலுத்த வேண்டும்.

பிரிமியம் தொகை: மரத்தின் வயது 4 அல்லது 7 வயது முதல் 15 வயதுள்ள மரங்களுக்கு மரம் ஒன்றிற்கு ரூ.2.25, 16 வயது முதல் 60 வயதுள்ள மரங்களுக்கு ரூ.3.50 செலுத்த வேண்டும்.

இழப்பீடு வழங்கும் முறை: ஒவ்வொரு பாதிக்கப்பட்ட விவசாயியும் இழப்பீடு கோரிக்கை மனுவை பூர்த்தி செய்து, பாதிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்களுக்குள் வேளாண் காப்பீடு நிறுவனத்திற்கு தெரிவிக்க வேண்டும். பாலிசி காலத்தில் மரங்கள் முழுமையாக பாதிக்கப்பட்டால் இழப்பீடு வழங்கப்படும். காப்பீட்டு தொகை 7 வயது முதல் 15 வயதுள்ள மரங்களுக்கு மரம் ஒன்றிற்று ரூ.900ம் 16 வயது முதல் 60 வயதுள்ள மரங்களுக்கு மரம் ஒன்றிற்கு ரூ.ஆயிரத்து 750ம் வழங்கப்படும். வறட்சிக்கான நஷ்ட ஈடு அருகிலுள்ள மழைமானியால் பதிவாகியுள்ள மழையின் அளவோடு ஒப்பிட்டு தீர்மானிக்கப்படும். மேலும் விபரங்களுக்கு உங்கள் பகுதி வேளாண்மை உதவி இயக்குநர்களை தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் என உச்சிப்புளி வேளாண்மை உதவி இயக்குநர் சுப்புராஜ் தெரிவித்துள்ளார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**விலை வீழ்ச்சி எதிரொலி: வெங்காய ஏற்றுமதிக்கு கட்டுப்பாடு நீக்கம்**



**புதுடெல்லி,**

வெங்காய விலை சரமாரியாக உயர்ந்ததால், கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம், வெங்காயத்துக்கு குறைந்தபட்ச ஏற்றுமதி விலை நிர்ணயிக்கப்பட்டது. ஏற்றுமதியை கட்டுப்படுத்த, குறைந்தபட்ச ஆதரவு விலை பலதடவை உயர்த்தப்பட்டது.

ஆனால், தற்போது அதிக வரத்து காரணமாக வெங்காய விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

இதனால், வெங்காய ஏற்றுமதிக்கான கட்டுப்பாட்டை நீக்கும் வகையில், வெங்காயம் மீதான குறைந்தபட்ச ஏற்றுமதி விலையை மத்திய அரசு நேற்று ரத்து செய்தது.

**இந்தியாவிலேயே உணவு உற்பத்தியில் தமிழகம் முதன்மை மாநிலமாக திகழ்கிறது**



**பரமக்குடி,**

இந்தியாவிலேயே உணவு உற்பத்தியில் தமிழகம் முதன்மை மாநிலமாக திகழ்வதாக அமைச்சர் சுந்தர்£ஜன் பேசினார்.

**வேளாண் கருவிகள்**

பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் அலுவலக வளா கத்தில் வேளாண்மை பொறி யியல் துறை சார்பில் விவசா யிகளுக்கு மானிய விலையில் வேளாண் கருவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. நிகழ்ச் சிக்கு செயற்பொறியாளர் யுவ ராஜ் தலைமை தாங்கினார். உதவி செயற்பொறியாளர் கள் சிதம்பரேசன், சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வகித் தனர். விழாவில் அமைச்சர் சுந்தர்ராஜன் கலந்து கொண்டு 33 விவசாயிகளுக்கு ரூ.35 லட்சத்து 76 ஆயிரத்து 740 மதிப்பிலான வேளாண் கரு விகளை வழங்கினார்.

பின்னர் விழாவில் அவர் பேசியதாவது:- நவீன வேளாண்மை எந்திரங் கள் மூலம் கரும்பு, நெல் உற்பத் தியை பெருக்க முதல்- அமைச் சர் ஜெயலலிதா நடவடிக்கை எடுத்து வருகிறார். வேளாண்மை துறையின் 2ம் பசுமை புரட்சியை ஏற்படுத்தி வருகிறார். நாட்டின் முதுகெ லும்பாக திகழும் விவசாயிகள் பணிச்சுமையை குறைக்கும் வகையில் எந்திரங்கள் மூலம் நாற்று நடவும், களை எடுக்க வும் குறைந்த விலையில் விவ சாய கருவிகள் வழங்கப்படு கிறது. அதிகளவு காய்கறிகளை உற்பத்தி செய்ய பண்ணை காய்கறி திட்டத்தை செயல் படுத்தி வருகிறார்.

**<u>உணவு உற்பத்தி</u>**

நீர் உபயோகத்தை குறைக்க சிறு, குறு விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசன திட் டத்தை செயல்படுத்தி வருகி றார். தொலைநோக்கு திட்டத் தோடு சோலார் பம்பு மூலம் தண்ணீர் இறைக்கும் திட்டத்த செயல்படுத்தி அவை வேளாண் பொறியியல் துறை மூலம் வழங்கப்படுகிறது. கேழ் வரகு, கம்பு, குதிரைவாளி உள்ளிட்ட சத்து நிறைந்த நவதானியங்களை உற்பத்தி செய்ய விவசாயிகளை ஊக்கு விக்கும் வகையில் நிறைய திட் டங்களை முதல்-அமைச்சர் ஜெயலலிதா செயல்படுத்தி வருகிறார்.

2013-14ம் நிதியாண்டில் உணவு உற்பத்தியில் இந்தியா விலேயே தமிழகம் தான் முதன்மை மாநிலமாக திகழ் கிறது. இதற்காக மத்திய அர சின் விருதையும் பெற்றுள் ளது. இந்தியாவிலேயே தமிழ கத்தில் தான் 1950 ஸ்பின் னிங் மில்கள் உள்ளன. அதேபோல் அதிக நூற்பா லைகள் உள்ள மாநிலமும் தமிழ்நாடு தான். பஞ்சு உற்பத்தியை பெருக்க பருத்தி சாகுபடி திட்டத்தை முதல்-அமைச்சர் ஜெயல லிதா செயல்படுத்தியுள்ளார். அனைத்து துறைகளிலும் வளர்ச்சியடைந்து முன் னோடி மாநிலமாக தமிழகம் திகழ்கிறது.

**<u>முதன்மை மாநிலம்</u>**

முதல்-அமைச்சர் ஜெயலலி தாவின் சீரிய சிந்தனையாலும், முயற்சியாலும், தொலை நோக்கு திட்டங்களாலும் தமி ழகம் முதன்மை மாநிலமாக விளங்குகிறது. இதேபோல இந் தியா அனைத்து துறையிலும் முன்னேற, வல்லரசு நாடாக உருவாக முதல்-அமைச்சர் ஜெயலலிதா இந்தியாவுக்கு பிரதமராக வர வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார். பின்னர் விவசாயிகளுக்கு பவர் வீடர், பவர் டில்லர், கொழு கலப்பை, ரோட்டவேட்டர், மரம் அறுவை எந்திரம், கலப்பை, வாட்டர் பம்ப் போன்றவற்றை வழங்கினார். இதில் நகர் செயலாளர் கணே சன், இலக்கிய அணி செய லாளர் திலகர், தொழிற் சங்க பொருளாளர் நாகராஜன், கைத்தறி பிரிவு செயலாளர் அய்யான், ஜெயலலிதா பேரவை இணை செயலாளர் நயினா முகமது, கனகராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**அக்டோபர்–பிப்ரவரியில் சர்க்கரை உற்பத்தி 11 சதவீதம் சரிவு**



**மும்பை,**

நடப்பு சந்தை பருவத்தில் (அக்டோபர்–செப்டம்பர்) பிப்ரவரி வரையிலான ஐந்து மாதங்களில் சர்க்கரை உற்பத்தி 11 சதவீதம் சரிவடைந்து 1.69 கோடி டன்னாக குறைந்துள்ளது. பிப்ரவரி மாத இறுதி நிலவரப்படி 12 லட்சம் டன் சர்க்கரை ஏற்றுமதியாகியுள்ளது. இதில் 5 லட்சம் டன் மூலச்சர்க்கரையும் அடங்கும்.

சர்க்கரை உபரி அதிகமாக உள்ள நிலையில் மேலும் கையிருப்பு அதிகரிக்காமல் இருக்க மூலச்சர்க்கரை ஏற்றுமதியை மத்திய அரசு ஊக்குவித்து வருகிறது. இந்த வகையில் பிப்ரவரி, மார்ச் மாதங்களில் ஏற்றுமதி செய்யப்படும் மூலச்சர்க்கரைக்கு டன் ஒன்றுக்கு ரூ.3,300 மானியம் அறிவிக்கப்பட்டுள்ளது. நிதி நெருக்கடியில் சிக்கியுள்ள சர்க்கரை ஆலைகளுக்கு இது மிகவும் உதவியாக இருக்கும் என சந்தை வட்டாரங்கள் தெரிவித்தன. குறிப்பாக கரும்பு விவசாயிகளுக்கு பாக்கி வைத்துள்ள நிலுவைத் தொகையை ஆலைகள் வழங்க முடியும் என்று கூறப்படுகிறது.

சர்க்கரை உற்பத்தியில் பிரேசில் முதலிடத்தில் உள்ளது. மூலச்சர்க்கரை ஏற்றுமதியை இந்தியா ஊக்குவிப்பதால் பிரேசிலும் ஏற்றுமதியை அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதனால் சர்வதேச சந்தையில் மூலச்சர்க்கரை விலை குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தியாவில் ஆண்டுக்கு சுமார் 2.35 கோடி டன் சர்க்கரை நுகரப்படுகிறது. எனினும் கடந்த சில ஆண்டுகளாக தேவைப்பாட்டுக்கு அதிகமாக சர்க்கரை உற்பத்தியாகி வருகிறது. இதனால் ஏற்றுமதிக்கான வாய்ப்புகளும் அதிகரித்து

வருகின்றன. நடப்பு பருவத்தில் 2.50 கோடி டன் சர்க்கரை உற்பத்தியாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

**தேன்கனிக்கோட்டை பகுதியில் அட்டகாசம் செய்த யானைகள் கர்நாடகாவிற்கு இடம்பெயருகின்றன**



**தேன்கனிக்கோட்டை,**

தேன்கனிக்கோட்டை பகுதியில் கடந்த 4 மாதங்களாக அட்டகாசம் செய்து வந்த காட்டு யானைகள் கர்நாடகாவிற்கு இடம்பெயருகின்றன.

**யானைகள் அட்டகாசம்**

கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டையை சுற்றி நொகனூர், அய்யூர், மரக்கட்டா, ஜவளகிரி காப்பு காடுகள் உள்ளன. இந்த பகுதியில் யானைகள் அதிக அளவில் உள்ளன. இதைத் தவிர ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் கர்நாடகா மாநிலம் பன்னார்கட்டாவில் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட யானைகள் இந்த வனப்பகுதிக்கு வருவது வழக்கம்.

ராகி பயிர் அறுவடையை குறி வைத்து வரும் இந்த யானைகள் இங்குள்ள வனப்பகுதியில் முகாமிட்டு விவசாய பயிர்களை நாசம் செய்வது தொடர்ந்து வருகின்றன. இந்த ஆண்டும் கடந்த நவம்பர் மாதம் நூற்றுக்கும் மேற்பட்ட யானைகள் கூட்டமாக கர்நாடக மாநிலம் பன்னார்கட்டா வனப்பகுதியில் இருந்து தேன்கனிக்கோட்டை வனப்பகுதிக்கு வந்தன.

இவை தேன்கனிக்கோட்டை, ஓசூர் பகுதியில் பல குழுக்களாக பிரிந்து பல லட்சம் மதிப்பிலான விவசாய பயிர்களை நாசம் செய்தன. இந்த யானைகளை விரட்ட வனத்துறையினர் தீவிர நடவடிக்கை எடுத்தனர். ஆனாலும் யானைகள் தொடர்ந்து தேன்கனிக்கோட்டை வனப்பகுதியிலேயே முகாமிட்டிருந்தன.

**ராகி அறுவடை முடிந்தது**

இந்த நிலையில் ஓசூர், தேன்கனிக்கோட்டை வனப்பகுதியில் தற்போது ராகி அறுவடை முடிந்து விட்டதால் யானைகள் மீண்டும் கர்நாடகாவிற்கு செல்ல தொடங்கி உள்ளன. 10 முதல் 15 யானைகள் ஒவ்வொரு குழுக்களாக பிரிந்து கர்நாடகாவிற்கு செல்கின்றன.

கடந்த 2 நாட்களில் 50–க்கும் மேற்பட்ட யானைகள் கர்நாடகா வனப்பகுதிக்கு சென்று விட்டன. மீதம் உள்ள யானைகளும் ஒரிரு நாட்களில் கர்நாடகாவிற்கு சென்று விடும் என எதிர்பார்க்கப்படுகிறது. யானைகள் கர்நாடகா வனப்பகுதிக்கு செல்வதை மாவட்ட வன அலுவலர் உலகநாதன், தேன்கனிக்கோட்டை வனச்சரகர் முனுசாமி மற்றும் வனத்துறையினர் கண்காணித்து வருகிறார்கள்.

**வனத்துறை அறிவுரை**

இதுகுறித்து வனத்துறையினர் கூறியதாவது:–

கர்நாடக வனப்பகுதியில் இருந்து வந்த யானைகள் மீண்டும் கர்நாடகாவிற்கு செல்ல தொடங்கிவிட்டன. எனவே யானைகள் செல்லும் வழித்தடங்களை யாரும் அடைக்கவேண்டாம். அதேபோல யானைகள் தற்போது கூட்டம், கூட்டமாக செல்வதால், பொதுமக்கள் யாரும் வனப்பகுதிக்குள் செல்லவேண்டாம்.

விறகு பொறுக்கவோ, ஆடு, மாடுகளை மேய்க்கவோ யாரும் காட்டிற்கு செல்லவேண்டாம். தற்போது நொகனூர் காட்டில் உள்ள யானைகள் பாலதோட்டனப்பள்ளி, கச்சுவாடி, குண்டாளம், முனிபோயன்தொட்டி வழியாக கர்நாடக வனப்பகுதிக்கு செல்கின்றன. எனவே அந்த பகுதியில் யாரும் ஆக்கிரமிக்காமல், யானைகள் செல்ல ஒத்துழைப்பு தருமாறு

கேட்டுக்கொள்கிறோம். அதேபோல யானைகளை பார்க்க வேண்டும் என்ற ஆசையில் யாரும் வனப்பகுதிக்குள் வரவேண்டாம்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

**விவசாயிகளுக்கு வேளாண்மை இயந்திரங்கள் கலெக்டர் வழங்கினார்**



**திருவாரூர்,**

விவசாயிகளுக்கு வேளாண்மை இயந்திரங் களை கலெக்டர் நடராசன் வழங்கினார்.

**<u>வேளாண்மை இயந்திரங்கள்</u>**

திருவாரூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நபார்டு வங்கியின் உற்பத்தி யாளர்கள் அமைப்பு நிதியத் தின் கீழ் நன்னிலம் வட்டாரத் தில் உள்ள பசும்புவி உழவர் கூட்டமைப்பு உறுப்பினர் களான 21 ஆதி திராவிட விவசாயிகளுக்கு வேளாண்மை இயந்திரங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் திருவாரூர் மாவட்ட கலெக்டர் நடராசன் “பவர் டில்லர்” வேளாண்மை இயந்திரங்களை வழங்கி பேசினார்.

அப்போது அவர் கூறியதாவது:-

**<u>நிதி ஒதுக்கீடு</u>**

பண்ணை இயந்திரமய மாக்கல் மூலம் உற்பத்தியை பெருக்கவும், விவசாயிகளின் பொருளாதார நிலையை மேம் படுத்தவும் நன்னிலம் வட் டாரத்தில் உள்ள பசும்புவி உழவர் கூட்டமைப்புக்கு ரூ.1 கோடிய 12 லட்சத்து 39 ஆயிரம் திட்ட மதிப்பீட்டில் கறவை மாடுகள் வாங்கவும், வேளாண் இயந்திரமயமாக்கலை ஊக்கப்படுத்தவும், வேளாண்மை இயந்திரங்கள் வழங்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## அரசு மானியம்

இந்த திட்டத்தின் கறவை மாடுகள் வழங்கவும், டிராக் டர்கள், ரோட்டவேட்டர்கள், கல்டிவேட்டர்கள், லேசர் கதிர்கள் மூலம் நிலம் சமன் செய்யும் கருவிகள், சுழல் கலப்பைகள், பவர் டில்லர்கள் போன்ற விவசாய கருவிகள் வழங்க நிதி ஒதுக்கீடு பெறப் பட்டுள்ளது. அதன்படி அரசு மானியத்தில் பசும்புவி உழவர் கூட்டமைப்பு உறுப்பினர் களுக்கு விவசாய கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு கலெக்டர் கூறினார். நிகழ்ச்சியில் நபார்டு வங்கி மாவட்ட வளர்ச்சி மேலாளர் ரவிசங்கர், வேளாண்மைப் பொறியியல்துறை தஞ்சை மண்டல கண்காணிப்பு பொறி யாளர் மணி, செயற்பொறி யாளர் துரைசாமி, வேளாண்மை இணை இயக் குனர் தனசேகரன், வேளாண் துணை இயக்குனர் மயில் வாகனன், கூட்டுறவு சங்கங் களின் இணைப்பதிவாளர் ரவிச்சந்திரன், மாவட்ட கலெக்டரின் நேர்முக உதவி யாளர் செல்வராஜ், பசும்புவி உழவர் கூட்டமைப்பு செயலா ளர் தெய்வசிகாமணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## புதிய ஆழ்துளை கிணற்றில் இருந்து 30 அடி உயரத்திற்கு மேல் தண்ணீர் பாய்ந்தது



**கன்னிவாடி,**

திண்டுக்கல் மாவட்டத்தில் பருவமழை இல்லாததால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து கொண்டே வருகிறது. இதனால் விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் கன்னிவாடி அருகே உள்ள அம்மாபட்டியில் ஒரு தனியார் பருத்தி தோட்டத்தில் தண்ணீருக்காக கடந்த 2 தினங்களுக்கு முன்பு ஆழ்துளை கிணறு ஒன்று தோண்டப்பட்டது.

இது சுமார் 600 அடி ஆழம் வரை 6½ இன்ச் விட்டத்தில் தோண்டும் பணி முடிவடைந்தது. ஆனால் தண்ணீர் கிடைக்கவில்லை. அதற்கு மாறாக பயங்கர இரைச்சலுடன் காற்று வெளியே வந்தது. அதில் துர்நாற்றம் வீசவே, அப்பகுதி மக்கள் விஷ வாயுவாக இருக்கும் என்று பயந்தனர்.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் இரவு ஆழ்துளை கிணற்றில் இருந்து சுமார் 30 அடி உயரத்திற்கு மேல் தண்ணீர் பாய்ந்தது. இதனை கேள்விப்பட்ட அப்பகுதி மக்கள் அங்கு கூட்டம், கூட்டமாக வந்து தண்ணீர் பாய்ந்து செல்வதை பார்த்து வியந்தனர். பின்னர் நேற்று காலையில் ஆழ்துளை கிணற்றில் இருந்து வெளியே வந்த தண்ணீரின் அளவு குறைந்தது. இதுகுறித்து தகவலறிந்த சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் நேரில் சென்று ஆழ்துளை கிணற்றின் தண்ணீர் வரத்தை ஆய்வு செய்தனர்.